## UNIT-I

## SYLLABUS

**பக்தி இலக்கியம் –** சைவ, வைணவ இலக்கியங்கள் - தோற்றம் ,வளர்ச்சி, வரலாறு, **சைவம்** - (15 பாடல்கள்) பெரியபுராணம் – திருமூலநாயனார் புராணம், **வைணவம்** – ஆண்டாள் நாச்சியார் திருப்பாவை: (11 பாடல்கள்)

1. **சைவம் - (15 பாடல்கள்)** பெரியபுராணம் – திருமூலநாயனார் புராணம் -அந்தி இளம்பிறைக் கண்ணி, மற்று அவர்தாம் அணிமா, காவிரி நீர் பெருந்தீர்த்தம், அந்நிலைமைத் தானத்தை, அந்தணர்தம் சாத்தனூர், மற்றுஅதன் தன் உடம்பினை, இவன் உயிர்பெற் றெழில், பாய்த்திய பின் திருமூலராய், வெய்ய சுடர் கதிரவனும், அங்கவளும், பித்து உற்ற மையல் அன்று, இந்த நிலைமையில், ஆவடு தண்துறை, ஊன்உடம்பில், முன்னிய அப்பொருள்.
2. **வைணவம் – ஆண்டாள் நாச்சியார் திருப்பாவை: (11 பாடல்கள்):** மார்கழித்திங்கள், வையத்து வாழ்வீர்காள், ஓங்கி உலகளந்த, ஆழி மழைக்கண்ணா, மாயனை மன்னுவட மதுரை, சிற்றம் சிறுகாலே, ஒருத்தி மகனாய், மாலே மணிவண்ணா, கூடாரை வெல்லும், கறவைகள் பின்சென்று, வங்கக்கடல் கடைந்த.

KAHE

## அலகு-1:

## பக்தி இலக்கியம்

## 1. பெரியபுராணம்: திருமூலநாயனார் புராணம்

### 1.சிவயோகியின் பொதிகை மலைப்பயணம்:

திருக்கையிலாயத்தில் சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற்பெரும் காவல்பூண்ட திருநந்தி தேவரது திருவருள்பெற்ற மாணாக்கருள் அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும் (அட்டமா சித்திகள்) கைவரப்பெற்ற சிவயோகியார் ஒருவர் இருந்தார். அவர் அகத்திய முனிவரிடத்திற் கொண்ட நட்பினால் அவரோடு சிலகாலம் தங்குவதற்கு எண்ணி அம்முனிவர் எழுந்தருளிய பொதியமலையை அடையும் பொருட்டுத் திருக்கயிலையினின்றும் புறப்பட்டுத் தென்திசை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில், இறைவன் அற்புதத் திருக்கூத்தாடியருளும் பொற்கோயிலாகிய தில்லையை அடைந்தார்.

### 2. திருவாவடுதுறையை நோக்கிப் பயணம்:

தில்லையில் இறைவனின் திருநடங் கண்டு மகிழ்ந்த சிவயோகியார், அங்கிருந்து புறப்பட்டுக் காவிரியில் நீராடி அதன் தென்கரையினை அடைந்து, உமையம்மையார் பசுவின் கன்றாக இருந்து இறைவனை வழிபாடு செய்து அம்முதல்வனுடன் எழுந்தருளியிருந்து அருள் புரியும் திருவாவாடுதுறையை அடைந்தார். திருக்கோயிலை வலம் வந்து பசுபதியாகிய இறைவனை வழிபட்டு, அத்திருப்பதியினை விட்டு நீங்காதொரு கருத்தும் தம் உள்ளத்தே தோன்ற அங்கே தங்கியிருந்தார்.

### 3. பசுக்கூட்டத்தின் கண்ணீர்: ஆயன் (மாடு மேய்ப்பவனின் இறப்பு)

ஆவடுதுறையிறைவரை வழிபடுதலில் ஆராத பெருங்காதலையுடைய சிவயோகியார், அத்தலத்தை அகன்று செல்லும்பொழுது காவிரிக் கரையிலுள்ள சோலையிடத்தே பசுக் கூட்டங்கள் கதறி அழுவதைக் கண்டார். அந்தணர்கள் வாழும் சாத்தனூரிலே தொன்றுதொட்டு ஆனிரை மேய்க்கும் குடியிற் பிறந்த ஆயனாகிய மூலன் என்பவன் விடம் தீண்டி இறந்தமையால் அதனைத் தாங்காத பசுக்கள் உயிர் நீங்கிய அவனது உடம்பினைச் சுற்றிச் சுழன்று வந்து மோப்பனவும் கதறுவனமாகி வருந்தின.

### 4. பசுக்களுக்கு உதவுதல்:

மேய்ப்பான் இறந்தமையால் பசுக்களைடைந்த துயரத்தினைக் கண்ட அருளாளராகிய சிவயோகியாரது உள்ளத்தில் 'இப்பசுக்கள் உற்ற துயரத்தினை நீக்குதல் வேண்டும்' என்றதோர் எண்ணம் திருவருளால் தோன்றியது. 'இந்த இடையன் உயிர்பெற்றெழுந்தாலன்றி இப்பசுக்கள் துயரம் நீங்கா' எனத் திருவுளத்தெண்ணிய தவமுனிவர், தம்முடைய திருமேனியைப் பாதுகாப்பான இடத்தில் மறைத்துவைத்து விட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் (பரகாயப்பிரவேசம்) என்னும் வழியில், தமது உயிரை மூலனது உடம்பிற் புகுமாறு செலுத்தித் திருமூலராய் எழுந்தார். எழுதலும் பசுக்களெல்லாம் தம் துயரம் நீங்கி அன்பினால் அவரது உடம்பினை நாத்தழும்ப நக்கி மோந்து கனைத்து மிகுந்த களைப்பினாலே வாலெடுத்து துள்ளிக்கொண்டு தாம் விரும்பிய இடத்திற் சென்று புல் மேய்ந்தன. திருமூலநாயனார் அதுகண்டு திருவுளம் மகிழ்ந்து ஆனிரைகள் மேயுமிடங்களிற் சென்று நன்றாக மேய்த்தருளினார். வயிறார மேய்ந்த அப்பசுக்கள், கூட்டமாகச் சென்று காவிரியாற்றின் முன்துறையிலேயிறங்கி நன்னீர் பருகிக் கரையேற, அப்பசுக்களைக் குளிர்ந்த நிழலிலே தங்கி இளைப்பாறும்படி செய்து பாதுகாத்தருளினார்.

### 4. மாலையில் சிவயோகியாரின் நிலை:

சூரியன் மேற்றிசையை அணுக மாலைப்பொழுது வந்தது. பசுக்கள் தத்தம் கன்றுகளை நினைத்துத் தாமே மெல்ல நடந்து சாத்தனூரை அடைவனவாயின. அப்பசுக்கள் செல்லும் வழியிலே தொடர்ந்து பின்சென்ற சிவயோகியார். பசுக்கள் யாவும் தத்தமக்குரிய வீடுகளிற் சென்று சேர்ந்த பின்னர் அவ்வூர் வழியில் தனியே நிற்பாராயினர்.

### 5. மூலனது மனைவியின் பெருந்துன்பம்:

அந்நிலையில், மூலனுடைய மனைவி, 'என் கணவர் பொழுது சென்ற பின்னரும் வரத் தாழ்ந்தனரே, அவர்க்கு என்ன நேர்ந்ததோ' என்று அஞ்சியவளாய்த் தன் கணவனைத் தேடிக் கொண்டு சென்று, சிவயோகியார் நின்ற இடத்தையடைந்தாள். தன் கணவது உடம்பிற்

தோன்றிய உள்ளுணர்வு மாற்றத்தைக் கண்டு 'இவர்க்கு ஏதோ தீங்கு நேர்ந்திருத்தல் வேண்டும்' என்று எண்ணி அவரைத் தளர்வின்றி இல்லத்திற்கு அழைத்துச் செல்லும் கருத்துடன் அவருடம்பைத் தொடுவதற்கு நெருங்கினாள். திருமூலராகிய சிவயோகியார், அவள் தம்மைத் தீண்டாதபடி தடுத்து நிறுத்தினார். தன் கணவனையன்றி மக்கள் முதலிய நெருங்கிய சுற்றத்தார் ஒருவருமின்றித் தனியாளாகிய அவள், அவரது நிலைகண்டு அஞ்சி மனங் கலங்கினாள். 'உமது அன்புடைய மனைவியாகிய என்னை வெறுத்து நீங்குதலாகிய செய்கையால் எனக்குப் பெருந்துன்பத்தைச் செய்து விட்டீர்' என்று கூறிப்புலம்பி வாட்டமுற்றாள். அந்நிலையில் நிறைதவச்செல்வராகிய திருமூலர், அவளை நோக்கி 'நீ எண்ணியவாறு இங்கு உனக்கு என்னுடன் எத்தகைய உறவேதும் இல்லை' எனக் கூறிவிட்டு, அவ்வூரில் அருந்தவர் பலரும் தங்கியிருந்தற்கென அமைந்துள்ள பொதுமடத்திற் புகுந்து சிவயோகத்தில் அமர்ந்திருந்தார்.

தன் கணவனது தன்மை வேறுபட்டதனைக் கண்ட மூலன் மனைவி, அது பற்றி யாரிடத்தும் சொல்லாமலும், தவ நிலையினராகிய அவர்பால் அணையாமலும் அன்றிரவு முழுவதும் உறங்காதவளாகத் துயருற்றாள். பொழுது விடிந்ததும் தன் கணவர் நிலையை அவ்வூரிலுள்ள நல்லோரிடம் எடுத்துரைத்தாள். அதுகேட்ட சான்றோர், திருமூலரை அணுகி அவரது நிலைமையை நாடி, 'இது பித்தினால் விளைந்த மயக்கமன்று' பேய் பிடித்தல் முதலாகப் பிறிதொரு சார்பால் உளதாகியதும் அன்று; சித்த விகாரக் கலக்கங்களையெல்லாம் அறவே களைந்து தெளிவு பெற்ற நிலையில் சிவயோகத்தில் அழுந்திய கருத்து உடையவராய் இவர் அமைந்துள்ளார். இந்நிலைமை யாவராலும் அளந்தற்கரியதாம்' எனத் தெளிந்தனர். "இவர் இருவகைப் பற்றுக்களையும் அறுத்து ஞானோபதேசத்தால் பரமர் திருவடியைப் பெற்ற சீவன் முத்தர்களைப் போன்று எல்லாவற்றையும் ஒருங்கே அறியவல்ல முற்றுணர்வுடையவராக விளங்குகின்றார். ஆகவே முன்னை நிலைப்படி உங்கள் சுற்றத் தொடர்பாகிய வாழ்வில் ஈடுபடுவார் அல்லர்' என மூலன் மனைவிக்கு எடுத்துரைத்தார்கள். அதுகேட்ட அவள், 'அளவிலாத் துயரத்தால் மயக்கமுற்றாள். அருகேயுள்ளவர்கள் அவளைத் தேற்றி அவளது மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

**6. சிவயோகத்தில் திருமூலர்:**

சாத்தனூரில் பொதுமடத்தில் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூலர், யோகம் கலைந்து எழுந்து. முதல் நாளிலே பசுக்கள் வந்த வழியே சென்று தம் உடம்பினைப் பாதுகாப்பாக வைத்த இடத்திற்குச் சென்று பார்த்தார். அங்கு அதனைக் காணாதவராகி, அதுமறைந்த செயலை மெய்யுணர்வுடைய சிந்தையில் ஆராய்ந்து தெளிந்தார். பிறைமுடிக்கண்ணிப் பெருமானாகிய இறைவன், உயிர்களிடம் வைத்த பெருங்கருணையாலே அருளிய சிவாகமங்களின் அரும் பொருள்களை இந்நிலவுலகில் திருமூலரது வாக்கினால் தமிழிலே வகுத்துரைக்கக் கருதிய திருவருட்திறத்தால் சிவயோகியாரது முந்தைய உடம்பினை மறைப்பித்தருளினார். இம்மெய்மையினைத் திருமூலர் தமது முற்றுணர்வினால் தெளியவுணர்ந்தார். அந்நிலையில் தம்மைப் பின் தொடர்ந்து வந்த ஆயர்குலத்தவர்கட்கும் தமக்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென்பதை அவர்கட்கு விளங்க அறிவுறுத்தருளினார்; அவர்கள் எல்லாரும் தம்மைவிட்டு நீங்கியபின் சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்து அவ்விட்டத்தை விட்டகன்று திருவாவடுதுறைத் திருக்கோயிலை அடைந்தார். அத்திருக்கோயிலில் வீற்றிருந்தருளும் அம்மையப்பராகிய இறைவரை வணங்கி அத்திருக்கோயிலின் மேற்கில் மதிற்புறத்தேயுள்ள அரச மரத்தின்கீழ்த் தேவாசனத்தில் சிவயோகத்தில் அமர்ந்து, உள்ளத்தாமரையில் வீற்றிருந்தருளும் அரும்பொருளாகிய சிவபரம் பொருளோடு இரண்டறக்கூடி ஒன்றியிருந்தார்.

**7. திருமந்திரமாலை - அன்பே சிவம்**

இங்ஙனம் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூலநாயனார் ஊனோடு தொடர்ந்த இப்பிறவியாகிய துயரம் நீங்கி இவ்வுலகத்தார் உய்யும் பொருட்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளும் நால்வகை மலர்களாக விரிந்து விளங்கும் நல்ல திருமந்திரமாலையாகிய நூலை இறைவன் திருவடிக்கு அணிந்து போற்றும் நிலையில், 'ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்' என்னும் திருப்பாடலைத் தொடங்கி ஓராண்டுக்கு ஒரு திருப்பாடலாக இவ்வாறு மூவாயிரம் ஆண்டுகள் இவ்வுலகில் சிவயோக நிலையில் அமர்ந்திருந்து மூவாயிரம் திருப்பாடல்கள் அருளிச் செய்தார். எல்லாம் வல்ல பரம்பொருள் அன்பே உருவானவர் என்பதை தம் பாடல் மூலம் விளக்குகிறார். அப்பாடல் பின்வருமாறு:

**அன்பும்** சிவமும் இரண்டென்பர் அறிவிலார் **அன்பே** சிவமாவது யாரும் அறிகிலார் **அன்பே** சிவமாவது யாரும் அறிந்தபின் **அன்பே** சிவமாய் அமர்ந்திருந்தாரே.

## 2. ஆண்டாள் நாச்சியார் அருளிய திருப்பாவை

**1. நோன்பு கொண்டாட விரும்பும் சிறுமியர், மற்ற சிறுமியர்களை விடியற்காலை நீராட அழைத்தல்**

"அழகிய ஆபரணங்களை அணிந்த சிறுபெண்களே! செல்வம் மிகுந்த ஆயர்பாடியில் தொண்டுசெய்யும் செல்வத்தையும் கன்னிப்பருவத்தையும் உடையவர்களே, மாதங்களில் சிறந்த மார்கழி மாதத்தில், பௌர்ணமி நன்னாளில், கூர்மையான வேலையுடையவனும் பகைவர்க்கு கொடுமை செய்பவனும் ஆகிய நந்தகோபனுடைய குமாரனும், அழகு நிறைந்த கண்களையுமுடைய யசோதைக்கு இளம் சிங்கக்குட்டி போன்றவனும், கரிய மேகம் போன்ற மேனியையும், செந்தாமரை போன்ற கண்களையும், சூரியனைப்போல பிரகாசமாயும் நிலவைப்போல குளிர்ந்த முகத்தையுமுடைய நாராயணன், நாம் விரும்பிய வரங்களைத்தந்து அருள் புரிவான். எனவே, இந்த நோன்பில் கலந்து கொண்டு நீராட விரும்புகின்றவர்கள், வாருங்கள்".

**2. நோன்பு நோற்க விரும்புவோர், முக்கியமாக மேற்கொள்ள வேண்டியவையும், தவிர்க்க வேண்டியவையும்:**

"இப்பூமியில் வாழ்பவர்களே, திருப்பாற்கடலுள் அரிதுயில் செய்கின்ற பரமனின் திருவடிகளை அன்புடன்பாடி, நெய் உண்ணாது, பால் பருகாது, விடியற்காலை நீராடி, கண்களுக்கு மை இடாமல், தலையில் பூ சூடாமல், செய்யக்கூடாதவற்றைச்செய்யாமல், பொய் பேசாது, பெரியோர்களுக்கும், ஏழைகளுக்கும் தம்மால் இயன்ற அளவு வழங்கி, நாம் உய்யும் வகையை நாடி, மகிழ்ந்து, நாமும் நம் நோன்புக்கு மேற்கொள்ளும் செயல்களைக்கேளீர்!"

**3. உத்தமனைப்பாடி நோன்பு எடுப்போர் அடையும் பெரும் செல்வம்:**

"வாமனாவதாரத்தில் மஹாபலி மூன்றடி மண்ணை தாரை வார்த்துக்கொடுத்தவுடன், ஆகாயம் அளவு வளர்ந்து, மூன்று உலகங்களையும் தன் திருப்பாதங்களால் அளந்த புருஷோத்தமனுடைய நாமத்தைப்போற்றி, நாங்கள் நம் பாவை நோன்புக்கு உரியவர்களாக, ஒரு குறிக்கோளை முன்னிட்டு நீராடினால், நாடு முழுவதும் தீங்கினால் நலிவுராமல் மும்மாரி மழை பெய்திடும். அதனால் செழித்து வளர்ந்த பயிர்களுக்கு நடுவே கெண்டை மீன்கள் துள்ளும். அங்குள்ள குவளை மலர்களில் புள்ளிகள் உள்ள வண்டுகள் உறங்கும். பசுக்கள் பாலை சிறிதளவும் தேக்கிக்கொள்ளாமல் குடம் நிறைய சுரக்கும். இங்கனம், நீங்காத செல்வம் நிறைந்து காணப்பெறும்."

**4. மழை பொழியவைக்க ஒரு அரிய மந்திரம்**

"மழை பொழிவதற்கு காரணக்கடவுளான கண்ணா! கடலில் புகுந்து நீரை முகந்துகொண்டு, கம்பீர முழக்கமிட்டு, ஆகாயம் முழுதும் பரவி, திருமாலின் கருமேனி போன்று நிறம்பெற்று, மூங்கில் போன்ற அழகிய தோள்களையும், திருமாலின் வலக்கரத்தில் ஏந்திக்கொண்டுள்ள சுதர்சன சக்கரம் போல் பிரகாச ஒளி வீசிக்கொண்டு, அவனது

இடக்கரத்தில் ஏந்திக்கொண்டுள்ள சங்கின் சப்தம் போல் இடி இடித்து முழங்கி, அப்பரமன் கையிலுள்ள சார்ங்கம் என்னும் வில்லால் எய்தப்பட்ட அம்பு மழைபோல், உலகமக்கள் வாழும்படியாகவும் நாங்களும் மகிழ்ந்து மார்கழி நீராடவும், சரமாரியாக மழை பொழிய வேண்டுகிறோம்."

**5. கண்ணனை வாழ்த்தும் முறையும், அடையும் பலன்களும்**

"மாயனும், தெய்வத்தன்மை பொருந்திய வட மதுரையில் உதித்தவனும், சுத்தமான நீர் நிரம்பிய யமுனைக்கரையில் விளங்குபவனும், ஆயர் குலத்தில் தோன்றிய அழகிய விளக்கு போன்றவனும், தேவகியை பெருமைப்படுத்தியும், யசோதைக்கு சிறு மணிக்கயிற்றால் கட்டுண்ட வயிற்றைக் காட்டி சந்தோஷப்படுத்தியவனுமான கண்ணனை, உள்ளும் புறமும் பரிசுத்தமாய் வந்து, வாசனை மிக்க மலர்களால் அர்ச்சனை செய்து, உடலால் வணங்கி, வாயினால் பாடி, மனத்தினால் சிந்தித்தால், முற்பிறவிப்பாவங்களும், அறியாமல் வருகின்ற பாவங்களும், நெருப்பில் விழுந்த பஞ்சு போல் அழிந்து போகும். எனவே, அவன் திருநாமங்களை சதா ஓதிக்கொண்டிருத்தல் வேண்டும்."

**6. உன் மீது பற்று கொண்ட எங்களுக்கு மற்ற பொருள்கள் மீது இச்சை ஏற்படாமல் காப்பாயாக!**

"விடியற்காலையில் உன்னை வழிபட்டு, உன் தாமரை மலரைப் போன்ற மென்மையான திருவடிகளைப் போற்றி நாங்கள் விரும்பியவைகளைக் கொடுத்து அருள் செய்யவேண்டும். பசுக்களை மேய்த்து, ஜீவனம் செய்யும் ஆயர்குலத்தில் எங்களைப் போன்றே அவதரித்த நீ, எங்களிடமிருந்து சிறு கைங்கரியமாவது பெற்றுக் கொள்ளாமல் செல்வது கூடாது. உன்னிடமிருந்து, பறை வாத்தியம் போன்ற பொருள்களைப் பெற்றுக் கொண்டவுடன், உன்னை விட்டு அகல நாங்கள் இங்கு வரவில்லை. காலம் உள்ளவரை, மேலும் மேலும் மீண்டும் பிறவியெடுப்பினும், உன்னுடைய உறவினர்களாகவே இருப்போம். உனக்கே நாங்கள் பணி செய்து கிடப்போம். உன் மீது அளவிலா பற்று கொண்டுள்ள எங்களுக்கு, மற்ற பொருள்களின் மீது ஏற்படும் ஆசையை தவிர்தருள வேண்டும்."

7. **உன்னைப் பிரிந்து யான்படும் துயர் நீக்குவாய்!**

"தேவகி பிராட்டிக்கு மகனாய் அவதரித்து, அந்த இரவிலேயே யசோதைப் பிராட்டிக்கு மகனாய் மறைந்து வளரும் காலத்தில், அதை பொறுக்காது உன்னைக் கொல்ல நினைத்த கம்ஸனின் எண்ணத்தைப் பயனற்றதாக்கி, அவன் வயிற்றில் நெருப்புபோல வந்த திருமாலின் அவதாரமே! உன்னிடத்தில் வந்தடைந்து, எங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்ய வந்துள்ளோம். நாங்கள் விரும்பியதை வழங்குவீரானில், உன் வீரச் செயல்களைப் பாடி, அளவில்லா செல்வத்தையடைந்து, உன் பிரிவினால் வந்த துயர் நீங்கி, மகிழ்ச்சியுடன் இருப்போம்."

**8. மார்கழி நீராட தேவையான பொருள்களை அளிப்பாயாக!**

"பக்தர்களை மயக்கங்கொள்ளச்செய்தவனே! நீல மணி போன்ற நிறத்தையுடையவனும், யாதவ குலவிளக்கு போன்றவனும், ஆலின் இலையில் துயில்பவனுமான கண்ணனே! நாங்கள் மேற்கொள்ளயிருக்கும் நோன்புக்கு தேவையான பால் போன்ற நிறமுடைய, உன் இடக்கையில் உள்ள பஞ்சசன்னியத்தை ஒத்த சங்குகளையும்,

அகலமான பறை வாத்தியங்ககளையும், பல்லாண்டு பாடுபவர்களையும், தீபங்களையும், கொடிகளையும் நீ எங்களுக்கு அருள் புரிந்து அளிப்பாயாக!"

**9. உள்ளம் குளிரும்படியாக நோன்பு நிறைவடைய வேண்டும்**

"பகைவர்களை வெல்லும் கோவிந்தா! உன் புகழைப் பாடி பறையைப் பெற்று, பின் நாங்கள் இன்னும் உன்னிடத்து பெறவிரும்பும் பரிசுகள் யாவையெனில், அனைவரும் புகழத்தக்க முன் கையில் அணியும் வளைகளும், தோளுக்கு இடும் ஆபரணங்களும், தோடும், காதணிகளும், காலில் அணியும் ஆபரணங்களும், புதிய ஆடைகளும் ஆவன. இவைகளப் பெற்று புத்தாடைகளையணிந்து பால் சோறு மூடும்படி நெய் பரிமாறி, அவற்றை முழங்கையிலிருந்து வழியும்படி உண்டு, உன்னுடன் நாங்கள் கூடி, இன்புற்றிருந்து, குளிர வேண்டும். இவ்வாறாக எமது நோன்பு முடிவடைதல் வேண்டும்."

**11. சிறிய பெயரால் உன்னை அழைத்ததால் எங்களை கோபிக்காது, எங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்வாயாக!**

"பசுக்களை மேய்த்து, காடு சென்று, அங்கு ஒன்று கூடி உண்பவர்களும், ஞானமிலாத சொற்ப அறிவும் படைத்த நாங்கள், ஆயர்குலத்தினில் பிறந்த உன்னை எங்கள் குலத்தவனாக பெற்றடைய பெரும் புண்ணியத்தை செய்துள்ளோம். யாதொரு குறைவும் இல்லாத 'கோவிந்தன்' என்னும் பெயரினைக்கொண்ட கண்ணனே! உன்னுடன் எங்களுக்கு ஏற்ப்பட்ட உறவை, யாராலும் அழிக்க முடியாதது. அற்ப அறிவைப் பெற்ற சிறுமியரான நாங்கள், உன்னிடம் கொண்டுள்ள மிகுந்த அன்பினால் உன்னை (நாராயணன், மாயன், மாதவன் போன்ற) சிறிய பெயர்களினால் அழைத்தமைக்கு கோபித்துக் கொள்ளாமல், நாங்கள் வேண்டி வந்த பொருட்களைத் தந்து அருள வேண்டும்."

12. **இந்த முப்பது பாடல்களையும் பாடுவோர் அடையும் பேரின்பம்**

திருப்பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமிர்தம் தந்தருளிய கண்ணபிரானை, கேசி என்ற அரக்கனைக் கொன்ற கேசவனை, பூர்ண சந்திரன் போன்ற முகத்தையுடைவனை, ஆபரணங்களை அணிந்த ஆயர்பாடி மகளிரை பறை என்ற பெயரில் அடிமையாக்கிக் கொண்ட கண்ணனின் வரலாற்றை, ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த புதிய தாமரை மலர்களாலான மாலையை உடுத்திய அந்தணருமான பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாளால் அருளிச் செய்த தமிழ் பாமாலை முப்பது பாடல்களையும் தவறாமல் ஆர்வத்துடன் உள்ளத்தூய்மையுடன் பாடுபவர்கள், மாலையணிந்த நான்கு திருத்தோள்களையும், சிவந்த கண்களையும், அழகிய முகத்தையும் எல்லா செல்வங்களையும் உடைய திருமகளை நாதனாய் பெற்ற ஸ்ரீமன் நாராயணின் திருவருள் பெற்று, எப்பொழுதும், எவ்வித குறையுமின்றி பேரின்பத்துடன் வாழ்வார்கள்."

பார்வை வினாக்கள்

***சிறு வினாக்கள்:*** ***(2 மதிப்பெண்கள்)***

1. பெரியபுராணம் சிறுகுறிப்பு வரைக.
2. பாவை நோன்பிற்குச் செய்யும் கிரிசைகளைச் சுட்டுக.
3. ஆண்டாள் – குறிப்பு வரைக.

***பெருவினாக்கள்:*** ***(6 மதிப்பெண்கள்)***

1. திருமூலரின் வரலாற்றை விரித்துரைக்க.
2. திருப்பாவை உணர்த்தும் திருமாலின் அவதாரச் சிறப்பை விவரி.
3. திருமூலநாயனாரின் பக்திச் சிறப்பை விளக்குக
4. ஆண்டாள் நாச்சியாரின் பக்தித் திறத்தை விவரி.

KAHE

# UNIT-1

1. பெரியபுராணத்தை இயற்றியவர் யார்?

(அ). திருமூலர் (ஆ). திருநாவுக்கரசர் (இ). சேக்கிழார் (ஈ). சேந்தன் பூதனார்

2. மூலனின் ஊர் எது?

(அ). சாத்தனூர் (ஆ). திருவாவடுதுறை (இ). இளையான்குடி (ஈ). தில்லை

3. சூடிக்கொடுத்த சுடர்கொடி எனப் போற்றப்படுபவர் யார்?

(அ). பெரியாழ்வார் (ஆ). பேயாழ்வார் (இ). பூதத்தாழ்வார் (ஈ). ஆண்டாள்

4. 'வேட்டல்' என்பதன் பொருள் ____________.

(அ). விருப்பம் (ஆ). வேண்டுதல் (இ). வேட்டையாடுதல் (ஈ). வணங்குதல்

5. முந்தை நிகழ் கோயிலுக்கு முதல் பெரு நாயகம் யார்?

(அ) நந்தி (ஆ) இந்திரன் (இ) பிரம்மன் (ஈ) திருமால்

6. குறுமுனி என்று போற்றப்படுபவர் யார்?

(அ) சேக்கிழார் (ஆ) திருமூலர் (இ) அகத்தியர் (ஈ) நந்தி

7. கோக்குலங்கள் உற்ற துயர் தீர்த்தவர் யார்?

(அ) சேக்கிழார் (ஆ) திருநாவுக்கரசர் (இ) திருஞானசம்பந்தர் (ஈ) திருமூலர்

8. பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாக வளர்ந்தவர் என்று யாரைச் சுட்டுகிறோம் ?

(அ) பேயாழ்வார் (ஆ) திருப்பாணாழ்வார் (இ) ஆண்டாள் (ஈ) மதுரகவியாழ்வார்

9. மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள் – யார் கூற்று?

(அ) மதுரகவியாழ்வார் (ஆ) ஆண்டாள் (இ) பேயாழ்வார் (ஈ) திருப்பாணாழ்வார்

10. திருமந்திரப் பாடல்களின் எண்ணிக்கை---

(அ) 2000 (ஆ). 3000 (இ). 1000 (ஈ). 5000

11. வைணவ சமயத்தின் முழுமுதல் கடவுள் ------

(அ). திருமால் (ஆ). முருகன் (இ)சிவன் (ஈ). விநாயகர்

12. ஆழி என்பதன் பொருள் யாது?

(அ). கடல் (ஆ) வானம் (இ). நிலவு (ஈ). பூமி

13. பெருமாளுக்கு பல்லாண்டு பாடியவர்----

(அ). பெரியாழ்வார் (ஆ) கூரத்தாழ்வார் (இ).பேயாழ்வார் (ஈ). திருமாலிசையாழ்வார்

14. பெரியபுராணத்தின் ஆசிரியர் யார்?

அ) கபிலர் ஆ) பெரியாழ்வார் இ) நப்பூதனார் ஈ) சேக்கிழார்

15. ஓங்கி உலகளந்த உத்தமன் யார்?

அ) சிவன் ஆ) திருமால் இ) பிரமன் ஈ) முருகன்

# UNIT-2

## SYLLABUS

| |
|---|
| **அலகு – II : சங்க இலக்கியம் :** சங்க இலக்கியங்கள் - அறிமுகம், **எட்டுத்தொகை, பத்துப்பாட்டு** |

**அ). எட்டுத்தொகை**

**நற்றிணை:** கொண்டல் மாமழை – குறிஞ்சி – தலைவன் - 140

**குறுந்தொகை:** வாரார் ஆயினும், வரினும் –முல்லை– தலைவி - 110

**ஐங்குறுநூறு :** மருதம் –தோழி -வேட்கைப்பத்து: வாழிஆதன் வாழி அவனி - 6

**பதிற்றுப்பத்து :** சிதைந்தது மன்ற - 27

**பரிபாடல்** : பரிபாடல் திரட்டு-வையை –10: மலைவரை மாலை- கரை நண்ணி 10:1-25, ஆங்க அணிநிலை மாடத்து- நீ கானும் போன்ம் 10: 41-55, இலம்படு புலவர் - ஏத்தினர் தொழுவே 10: 126-130.

**கலித்தொகை :** பாலைக்கலி- செவிலி – எறித்தரு கதிர்தாங்கி-9

**அகநானூறு :** அன்னை அறியினும் அறிக – தோழி - நெய்தல் - 110

**புறநானூறு :** யாதும் ஊரே யாவருங் கேளிர் –பொதுவியல்- 192

**ஆ). பத்துப்பாட்டு: நெடுநல்வாடை - கார்காலச் சிறப்பு :** வையகம் பனிப்ப -1-70

## 1 – நற்றிணை

### 1. குறிஞ்சி – தலைவன் கூற்று

எனது பெருமையுற்ற நெஞ்சமே! நீரை முகந்து கொள்ளுதலையுடைய கரிய மேகம் மேல்பாலுள்ள மலையிலே எழுந்து மழை பெய்து தழையச் செய்த சிறிய கிளைகளிலே பூங்கொத்துக்களையுடைய பெரிய குளிர்ச்சி பொருந்திய சந்தனமரத்தின் குறையோடு, பலவாய பொருள்களையும் சேர்த்து அமைக்கப்பெற்ற சாந்தம்பூசிய கூந்தலை அழகு பெற வாரி, அச்சாந்தம் காய்ந்தவழி உதிர்க்கப்பட்ட துகள் பொருந்திய ஐவகையாக வகுக்கப்பட்ட கூந்தலையும பெரிய கண்ணையுமுடைய தோழியர் மகிழுமாறு, தன் தந்தையின் நெடிய தேர் இயங்குகின்ற நிலவு போன்ற வெளிய மணல் பரவிய முன்றிலின்கண், விளையாடும் வண்ணம் பந்தோடு செல்லுகின்ற நம்பால் அன்பில்லாத இளமகள், நம்மை அருள் செய்தாலும் அங்ஙனம் அருள்செய்யாளாய் அகன்று போனாலும், நீ பெரிதும் மனமழிந்து இரந்து வழிபட்டு நிற்றலை வெறாதே கொள். யான் அடைந்துடைய காமநோயொடு கலந்த துன்பமாகிய அவலத்தை ஒழிக்குமருந்தாவாள் அந்த அன்பில்லாத இளமகள் ஒருத்தியேயன்றி வேறொன்று சிறிதளவேனும மருந்தாகும் தன்மையதில்லைகாண்!

## 2 – குறுந்தொகை

தோழி, நீரிலுள்ள, நீலத்தினது மலருஞ் செவ்வியையுடைய பேரரும்பை மலரச் செய்து, புதலிலே உள்ள, மயிற்பீலியின் ஒள்ளிய கண்ணைப் போன்ற கருவிளை மலரை அலைத்து, நுண்ணிய முள்ளையுடைய ஈங்கையினது செவ்விய அரும்புகள் மலர்ந்த, நிறத்தையும் துய்யையும் உடைய மலர்கள், உதிரும் படி, குளிர்ச்சியையுடையதாகி, இன்னாததாகி வீசுகின்ற வாடைக் காற்றினால், எத்தன்மையினள் ஆனாளோ, என்று நினைந்து கவலையுறாத தலைவர், வாராவிடினும், வந்தாலும், நமக்கு எத்தகைய உறவினராவர்? வருவதற்குள் இறந்து படுவேன்.

## 3 - ஐங்குறுநூறு

1. நின்னை எதிர்ப்பட்டவன்றே நீ வரைந்தாயெனக் கொண்டு இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது தலைவி பிறிதொன்றும் நினைத்திலள்; யாங்கள், ‘அகன்ற பொய்கைக்கு அணியாகத் தாமரையையுடைய ஊரனாதலால், அத்தண்டுறையூரன் மனைக்கு அணியாம்வண்ணம் இவளை வரைவானாக; எந்தையும் கொடுப்பானாக’ என விரும்பினேம்.

## 4 - பதிற்றுப்பத்து

1. விளங்குகின்ற வளையினையணிந்த இள மகளிர்; இடையறவின்றித் தொடர்ந்து மலரும் குவளையின் முழுப் பூவைச் சேர்த்து; ஆம்பலின் மலர்ந்த பூக்களை அவற்றின் இடையே அகப்படத் தொடுத்த தழையினையுடுத்து; சுரிந்த தலைமயிரிற் பூவாற்றொடுக்பட்ட கண்ணியணிந்து கள்ளுண்ணும் இயல்பினரான; இசை இனிதுகூட இசைக்கும் இயவர் தங்கியிருக்கும் நீர்த்துறைக் கண்ணிற்கும், மருத மரத்தின்மேல் ஏறி நெற்கதிர்களை மேயும் புட்களை ஓட்டுதற்காக தெளிந்த தம் விளிக் குரலையெடுத்து இசைப்பாராயின்; வயலருகேயுள்ள பொழில்களில் தங்கும் பசிய மயில்கள் அம்மகளிரிசைக்கு ஒப்ப ஆடுதலாலெழும் ஆரவாரமும்; பொய்கையின் வாயிலிடத்தே அமைந்து புனலால் தாக்கப்படும் கதவின் கசிகால்களிற் பூக்கும்; நெய்தற்பூவை ஊதும் முறைமையினை உடையவராய் நிரை நிரையாயிரைத்துச் செல்லும் வண்டினம் நிறைந்த நன்செய்ப் புலத்திற் செல்லும்; பண்டியின் வலிய வாயையுடைய உருளையானது; அப்பண்டியைச் செலுத்துவோர்; துள்ளி உரப்ப எருதுகளைச் செலுத்த; நல்லெருதுகள் முயன்று ஈர்த்துச் சேற்றினின்று கழிந்தேகும் வருத்தத்திடைப் பிறக்கும் ஆரவாரம் அல்லது; வேறே போராரவாரம் கேட்டறியாத நல்ல நாட்டின்; புது வருவாய் குன்றாத விருப்பம் பொருந்திய அழகானது; நீ வெகுண்டு சீறிப் பார்த்ததனால் தெளிவாகச் சிதைந் தழிவதாயிற்று.

## 5 - பரிபாடல்

### வையை

ஒரு தலைவன் போர்செய்யும்பொருட்டுத் தன் தலைவியைப் பிரிந்து சென்றான; செல்லுகையில் இன்ன பருவத்தில் வருவேனென்று கூறிச்சென்றனன். அவன் அங்ஙனம் கூறிய பருவம்வந்தது. அப்போது தலைவன் வாராமையால் வருந்தியதலைவியிடம் தோழி "அவர் வந்துவிடுவார்" என்றுகூறி வற்புறுத்தினாள்; தலைவி அதுகேட்டும் வருந்துவாளாயினாள். அவளுடைய ஆற்றாமையைக் கண்டதோழி ஒரு பாணனைத் தலைவன்பால் தூது விட்டாள். அப்பாணன் தலைவன் இருந்த பாசறைக்கண் சென்று அவனைக்கண்டு கார்ப்பருவ வரவையும் வையையில் நிகழும் நீர்விழாவின் சிறப்பு முதலியவற்றையும்கூறலானான்:

மலையில் மாலையிற் பெய்தபெருமழையால் காலையில் வையையானது வெள்ளத்துடன் கடலோடு கலக்கும் பொருட்டு பல மலர்களாகிய போர்வையையும் பருமணலையும் மேலே மூடிக்கொண்டு உலகிற் பசி முதலிய துன்பங்கள் நீங்கவும் வண்டுகள் ஒலிக்கவும் கரை காவலரை அழைக்கின்ற பறைகள் அறையவும் போந்தது

அங்ஙனம் போந்த புனலில் ஆடும்பொருட்டு யாவரும் புறப்படலானார்கள். மகளிர் மேகலையை இறுகப் புனைந்தனர். வண்ண நீரை வீசும் கருவிகளையும் பனிநீர் கலந்த சந்தனத்தையும் எடுத்துக்கொண்டு குதிரைமீதும், பிடிமீதும், எருது பூண்டவண்டியின் மீதும், கோவேறு கழுதையின் மீதும், குதிரைவண்டியின் மீதும், சிவிகையின் மீதும், ஏறினர். மலராத முகையைப் போன்ற பருவத்தினரும் புதுமலர் மலர்ந்தது போன்ற பருவத்தினருமாகிய இளைய மாதரும் கருமயிருக்கிடையே நரை விராவிய கூந்தலுடையவரும் முழு நரையாகிய கூந்தலுடையவருமாகிய முதிய மாதரும் கற்புடை மகளிரும் பரத்தையரும் இவர்களுடைய தோழியர்களும் ஏவன் மகளிர்களும் மெல்ல நடந்து சென்று ஆற்றின் கரையைச் சேர்ந்தனர்; அவர்களுடைய மெல்லிய நடை தாளவிதியாற் கூட்டப்பட்ட பல வாத்தியங்களின் மென்னடையைப் போல இருந்தது.

இங்ஙனம் சேர்ந்த மகளிருள்மலர்ந்த மலர்போன்ற பருவத்தையுடைய மகளிரிற் சிலர் நீரின் அழகைக் கண்டனர்; சிலர் நீரணி மாடத்தில் ஏறிச் சென்றனர்; சிலர் குதிரையிலேறிச் சென்றனர்; சிலர் பிடி மீதேறிச் செலுத்தினர்; சிலர் மலர் நிறைந்த ஆற்றிடைக் குறையிற் சென்று தம்மால் விரும்பப்படும் கணவரைத் தழுவினர்; சிலர் யாமத்து உண்டான ஊடலின் குறையாகிய தேனை நுகர்ந்தனர்; சிலர் காமமாகிய மழு உடைப்பதனால் ஊடலை அகற்றிவிட்டுத் திரையை வீழ்த்துப் படுக்கையிற் சேர்ந்தனர்; இவரையன்றி முகைப் பருவத்து மகளிர் பூவைநாடி வந்து அடையும் வண்டைப்போலத் தம்முடைய காதற்கணவர் தம்மை வந்து எதிர்ப்பட்டு இன்புறும்படி நீராடலைக் குறித்துச் சென்றனர்; அவர்கள் தமக்குக் காவலாகிய பாட்டியர்களையும் தப்பி அவர் தடுத்தலையும் கடந்துபோய் தாம் நினைத்த பட்டினத்தைச் சேர்ந்து ஏற்றிவிட்ட பண்டங்களைக் கொடுத்து ஆண்டுள்ளன கொண்டு இடையூறின்றி வந்து கரையைச்சேரும் நாவாயை எதிர்கொள்பவரைப் போல விருப்பமுற்றுச் சென்று வையைப் புனலை எதிர்கொண்டனர். இத்தகைய மதுரையில் ஒரு களிறானது தனக்குப் பக்கத்தில் வரும் பிடியைக் கண்டு காமத்தால் மயக்கமுற்றுத் தன்மேலிருந்த மைந்தர் செலுத்தச் செல்லாமல் ஒரு புலிமுக மாடத்துக்கு அருகிலே நின்றது. அப்பொழுது அந்தப் பிடி அக்களிற்றினிடம் சென்ற மனத்தோடு மயக்கமடைந்து மேலுள்ள மகளிரோடு நடத்தலிற் சோர்ந்து சென்றது. களிறு நின்ற புலிமுக மாடத்திற் பண்ணி வைத்திருந்த புலியுருவத்தைக் கண்டு மெய்யான வேங்கையென்றும் களிற்றின் மேற்பாயுமென்றும் அது கருதி அஞ்சித் தன்மேலிருந்த மகளிர் நடுங்கும்படி பாகர் என்ன செய்யினும் அடங்காமல் சிதைந்தது; அதனைக் கண்ட களிறு பிளிறி அங்கு சத்துக்கும் அடங்காமல் சிதைந்தது. அது கண்ட அம்மைந்தர் அக்களிற்றைப் புலிமுக மாடத்தினின்றும் போக்கிப் பிடியின்பால் அணைவித்தனர்; அதனால் பிடியும் களிறும் அமைதியுற்றன; மகளிர் நடுக்கம் தீர்ந்தனர். இங்ஙனம் அம்மைந்தர் மகளிரது நடுக்கத்தைத் தீர்த்த செயல் பாயும் கயிறும் பாய்மரமும் நீங்கச் சிதையும் நிலையிலுள்ள மரக்கலத்தைத் திருத்தி அதன் உள்ளேயுள்ளாரது நடுக்கத்தைக்களையும் மீகாமன் செயலை ஒத்தது.

ஊடலையுடைய மகளிரும் மைந்தரும் யாழிசை மிடற்றுப் பாடல் கூத்து என்பவை தம் திண்மையை அழித்துக் காமத்தை உண்டாக்கியதனால் ஒருவரோடொருவர் அளவளாவும் ஆர்வம் உடையவராக இருந்தும் அவ்விருசாராருள் ஒவ்வொருவரும் தாம்தாம் ஊடல் நீங்கி முற்படுதற்கு நாணினர்; அதனாற் கூடாது மெலிவுற்றனர். இவர் செயல் மாறுபாடுடைய மன்னவர் இருவருடைய சேனைகள் தம்முட் போர்செய்து நொந்து பின்பு இருசாராரும் சமாதானம் செய்துகொள்ளும் நோக்கம் உடையவர்களாக இருந்தும் "இப்படை முன்னாகச் சமாதானம் செய்ய உடன்பட்டது" என்னும் வார்த்தை பிறக்குமென்று நாணி அதற்கு அஞ்சிப் பின்னும் நொந்து நிற்றலை ஒத்தது.

காமம் மிக்கு எழ அதனால் உண்டாகிய கண்ணின் களிப்புப் புலப்படா நிற்கவும் ஊரிலுள்ளவருக்கு அஞ்சி அதனைச் சிலர் ஒளித்தனர்; அவரது நிலைமை கள்ளை உண்டு அதனால் உண்டான மயக்கம் எழ அம்மயக்கத்தால் உண்டான மதர்ப்பே அவர்கள் நிலையை வெளிப்படுத்தி நிற்கவும் ஊராருடைய பழிமொழியை அஞ்சி மறைப்பார் நிலைமையைப் போன்றது. இந்த வையைப் புனலானது கள்ளையும் காமத்தையும் பொருந்தியதனாற் கரையற்ற இன்பவெள்ளத்தைத் தந்தது.

நீர் விளையாட்டினால் இளைத்த மகளிரெல்லாம் புணையை விட்டுக் கரையேறினர். அகிற்புகையால் உடம்பின் ஈரத்தைப் உலர்த்தி மார்பிலே கலவைக் குழம்பைப் பூசினர்; அதன் மணம் திசையெங்கும் கமழ்ந்தது. சில மகளிர் உறையினின்றும் கழற்றிய வள்ளத்தில் வெப்பமுள்ள மதுவை வார்த்துக் கையிலேந்தித் தேவமகளிர் மதியை வாயில் வைத்து அதன் கிரணங்களை உண்ணுதல் போலத் தம் வள்ளத்தை வாயில் வைத்து மதுவை உண்டனர்; சிலர் மேலேவெண்டுகிலைப் போர்த்தனர்; சிலர் தம்கூந்தலில் வெள்ளையாடையைச் சுற்றி ஈரம் புலர முறுக்கினர்; சிலர் குங்குமச்சேறு அகிற்சாந்து பச்சைக் கருப்பூரம் ஆகிய இவற்றைச் சாந்தம்மியிலிட்டு நெருப்பைப் போன்ற நிறத்தை அடையும்படி குழவியினால் அரைத்தனர்; சிலர் பொன்னாற்செய்த சங்கு நண்டு இறவு வாளை என்பவற்றை நீரின்கண் இட்டு "விளைக பொலிக" என்று வாழ்த்தினர்; சிலர் வறியோரது நிலையையறிந்து அவர்கள் ஈகவென்று கேட்பதற்கு முன்னரே அவர்கள் விரும்பும் பொருளைத் தானம் செய்தனர்; சிலர் நீலமணி போன்ற கூந்தலில் பத்துவகைத் துவர்களையும் தேய்த்துக்கொண்டு நீராடினர்; சிலர் எண்ணெய் நீங்கும்படி அரைப்பினைத் தேய்த்துக்கொண்டனர்; சிலர் மாலையையும் சந்தனத்தையும் கஸ்தூரியையும் ஆபரணங்களையும் நீரில் இட்டனர்; சிலர்அப்புனலில் மதுவை ஊற்றினர்.

இங்ஙனம் அமைந்த மகளிருடைய நிறம் நீர்விளையாட்டினால் ஒளிபெற்றது; முகம் முதலியன சிவந்தன. இப்படி அவர்கள் நீரில் விளையாடியும் பின்னும் அவர் கண்கள் அப்புனலின் மேற்சென்றன; அவை காமபாணத்தினது கூரிய வாயைப் போன்று இருந்தன.

மகளிர் இவ்வாறு இருப்ப புனல் விளையாட்டால் மெலியாத மைந்தர்களிற் சிலர் வாழைத்தண்டைக் கையால் தழுவி நீரின்மேல் தாவித் தாவி நீந்திச் சென்றனர்; சிலர் தாழம்பூவின் தாதை அலையிலும் நுரை மேலும் தூவினர்; சிலர் ஓடத்திலேறி அதை நீரோட்டத்தோடு விட்டனர்; சிலர் புனலுக்கு எதிராகச் சென்று விளையாடிய இளைப்பினால் மெல்ல விளையாடினர்; மகளிர் தாம் இழைத்த சிற்றிலில் அட்ட சிறு சோற்றையிட அதைச் சிலர் உண்ணச் சென்றனர்; சிலர் தமக்கு முன் இட்டுப் பின் மறுப்பாராகிய மகளிருடைய பந்தையும் கழங்கையும் களவு கொண்டு ஓடிநீரிலே பாய்ந்தனர். வீரர் வேலாலும் வாளாலும் போர் செய்யக் களிறுகள் எதிர்த்துப் போரிடும் களத்தைப் போன்றமையால் அவ்வையைப் புனல் தெளிவிலதாயிற்று.

இவ்வண்ணம் நீர்விளையாட் டுநிகழ்ந்தபின் மாலைப்பொழுது வரவே சந்திரன் தோன்றினான். அங்குள்ள சனங்கள் மீண்டு மதுரையிற் புகத்தொடங்கினர்.

தங்கள் மேலிருந்த பகற்காலத்துக்குரிய அணிகளை நீக்கினர். மாலைக் காலத்தில் மலரும் மலர்களையும் தோளணி தோடு முத்துவடம் முதலான ஆபரணங்களையும் அணிந்தனர். பலர் பாடினர். அவர்களுடைய பாடலும் பரவலும் புகழ்தலும் ஆடுவாருடைய ஆடலொலியும் அதற்குரிய தாளவொலியும் தேனீக்களுடைய ஒலியும் மிக்கன. அங்ஙனம் எழுந்த பண்ணொலியைக் கேட்டுத் தம் இனமென்று கருதி ஊரிலிருந்த வண்டுகள் எதிர்வந்து ஊதின; பாடுவார்களது பூவேய்ந்த கொண்டைமேல் தேனையுண்டிருக்கும் வண்டுகள் உடன்வந்து ஊதின. யாவரும் தென்திசையை நோக்கி மீண்டனர். அப்பொழுது மாடத்தினுள்ளிருந்து மேலெழுந்த அகிற்புகையானது மலையின் மேல் தங்கி எழுந்த பனியை ஒத்தது.

வெள்ளத்தைக் கண்டு இவ்வாறு விருந்தயரும் மதுரையில் இசைக்குரிமையுடைய பாணரும் கூத்தரும் ஒருங்கு புகழ்ந்து தொழ வறுமையையுடைய புலவர்களுடைய கைந்நிறையப் பொன்னைச் சொரியும் பாண்டியனைப்போல வையை நதியானது வயலின்கண் பொன்னைப் பரப்பும் செயல் நீங்காமல் என்றும் இருப்பதாக!

## 6 - கலித்தொகை

துறை:

உடன் போய தலைவியின் செவிலி இடைச்சுரத்து முக்கோற் பகவரைக் கண்டு இவ்வகைப்பட்டாரை ஆண்டுக் காணீரோவென் வினவியாட்கு. ”அவரைக் கண்டு அஃதறமெனவே கருதிப் போந்தோம்; நீரும் அவர் திறத்து எவ்வம் பட வேண்டா” என எடுத்துக்காட்டி அவர் தெருட்டியது.

துறைவிளக்கம்:

களவொழுக்கத்தில் தலைவிக்கும் தலைவனுக்கும் இடையூறு உண்டாகியது. அதனால் தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு போயினன். அதனை அறிந்த செவிலித்தாய் தலைவியைத் தேடிச் செல்லும் போது முக்கோல் பகவரைக் கண்டு வினவ, அவர் ”நீங்கள் சொல்லிய இருவரையும் கண்டோம், அவர்கள் செயல் அறநெறிப்பட்டது. நீங்கள் துன்பப்படவேண்டாம்” என்று கூறுவது.

கருத்துரை

எறித்தலை தருகின்ற ஞாயிற்றின் வெம்மையைத் தாங்குவதற்காக ஏந்திய குடையின் நிழலில் உறியிலே வைத்த கமண்டலமும், புகழுக்குச் சான்றாக விளங்கும் முக்கோலையும் முறையாக தோளிலே வைத்துக் கொண்டு வேறு ஒன்றும் அறியாத நெஞ்சினராய், நீர் குறித்தவாறு ஏவல் செய்யும் ஐம்பொறிகளையும், உமக்கென்று கொள்கையினையும் ஒழுக்கத்தினையும் உடைய அந்தணீர்! நீவீர் வெம்மையான காட்டிடத்தே செல்லுகின்றவர் என்பதால் உம்மைக் கேட்கின்றேன். இக்காட்டுவழியிலே என் மகள் ஒருத்தியும் வேறொருத்தி மகன் ஒருவனும் தமக்குள்ளே பிறரறியாதவாறு கூடினர். இப்பொழுது அவர்கள் கூடியதைப் பிறரும் அறிந்துவிட்டனர். அவர்கள் இருவரையும் நீவீர் கண்டீரோ?பெரும! என்றவுடன் அவரும்,

“காணாமல் இருந்தேன் அல்லேன். கண்டேன். காட்டிடையே ஆண்மகனுக்குரிய அழகினையுடைய தலைவனோடு அரிய சுரத்தைக் கடந்து போகக் கருதிய மாட்சிமைப்பட்ட அணிகலன்களை அணிந்த மடப்பத்தையுடைய பெண்ணின் தாயர் போல்வீர்!

நறுமணப்பொருட்கள் விரவிய சந்தனம், உடம்பில் பூசிக் கொள்பவருக்குப் பயன் கொடுக்கிறதே தவிர, மலையிடத்து பிறந்திருந்தாலும் அச்சந்தனம் மலைக்கு என்ன செய்யும்? நினைத்துப் பார்த்தால் உம் மகளும் நுமக்கு அதைப் போன்றவளே!

சிறப்பான வெண்முத்தம் அணிவார்க்குப் பயன்படுகிறதே ஒழிய, கடல்நீரிலே பிறந்ததாயினும் நீருக்கு அவை என்ன செய்கின்றன? ஆராயுங்கால், நும் மகளும் உமக்கு அத்தன்மையானவளே!

ஏழுநரம்புகளால் கூட்டப்பட்ட இனிய இசை பாடுவோருக்கே பயனினைத் தருகின்றது. அது யாழுலே பிறந்திருந்தாலும் யாழுக்கு அது எதைச் செய்கின்றது? சிந்தித்துப் பார்க்கின் நும் மகளும் உமக்கு அதைப் போன்றவளே! என்பதால், மிக உயர்ந்த கற்பினையுடைய அப்பெண்ணுக்குத் துன்பத்தைத் தராதீர்! அவளோ, சிறந்தவன் பின்னே சென்றனள். அறத்திலிருந்து மாறுபடாது செல்லும் சிறந்த வழியும் அதுவேயாகும்.” என்றார்.

## 7 - அகநானூறு

மாலை போன்ற ஆயத்தாரோடு கடலில் ஒருங்கு விளையாடியும், கடற்கரைச் சோலையில் சிறு வீடு கட்டியும், சிறு சோற்றை அட்டுக் குவித்தும், இங்ஙனம் வருந்திய வருத்தம் நீங்க யாம் சிறிது இளைப்பாறியிருந்தேமாக (அதுபோது); ஒரு தலைவன் எம்மிடம் அணுக வந்து, பெரிய மெல்லிய மூங்கில் போலும் தோளினையுடைய மடப்பம் வாய்ந்த நல்லீரே, பகலும் ஒளி இழந்தது, தளர்ச்சி மிகவும்

உடையேன், யானும் மெல்லிய இலைப் பரப்பின் நீயிர் இடும் விருந்துணவினை உண்டு, இந்தக் கல்லென்ற ஆரவாரமுடைய சிறுகுடியில் தங்கினால் எய்தும் குறை யாது? என்று கூறினன்;

அவனைக் கண்டு கவிழ்ந்த முகத்தேமாய், மறைவான இடத்தே சேர்ந்திருந்து, இழுமென்ற மெல்லிய குரலில், இவ்வுணவு நுமக்கு ஏற்றன அல்ல; இழிவாய கொழு மீனாலாய உணவு என்று கூறினேம். பின்னர் நீண்ட கொடிகள் அசையாது நிற்கும் நாவாய்கள் தோன்றுவனவற்றை, யாம் காண்பேமல்லேமோ என்று கூறி, எம் சிற்றில் சிறு சோறுகளைக் காலாற் சிதைத்து விட்டு, அங்கு நில்லாது போய பலருள்ளும், அவன் என்னையே குறித்து நோக்கி பார்வையொடு, நல்ல நெற்றியினை யுடையாளே யான் செல்லுகோ என்று என் நெஞ்சம் அழிந்திடக் கூற; யான் செல்க என்னலும், (பெயராது என்னை) நோக்கியவனாய், அவன் தனது நீண்ட தேரின் கொடிஞ்சியினைப் பற்றிக் கொண்டுநின்றனன், இன்றம் என் கண் முன் நிற்பது அந்நிலையே போலும்;

இதனை அன்னை அறியினும் அறிவாளாக, அலர் கூறும் வாயினையுடைய அம் மெல்லிய சேரியினர் கேட்பினும் கேட்டிடுக, வேறொன்றும் இல்லாமையை நீயறியக் கூறி, வளைந்த சுழிகள் மேவிய புகாரிடத்துள்ள தெய்வத்தை நோக்கி, நினக்குக் கடிய சூள் செய்ததருவன்.

## 8 - புறநானூறு

திணை படாண் திணை

துறை பொருண்மொழிக்காஞ்சி

விளக்கம் – எமக்கு எல்லாமும் எமது ஊர், எல்லோரும் எம் சுற்றத்தார். தீமையும், நன்மையும் தமக்குத்தாமே ஆக்கிக்கொள்வன, மற்றபடி அவை பிறர் தர வருவன அல்ல. அதுபோலவே வருந்துதலும் வருந்தாமலும் இருத்தலும் தாமே வருபவையன்றி, பிறர் தர வருவன அல்ல. சாதலும் புதிது அல்ல. யாம் வாழ்தலை இனிது என்று மகிழ்வதும் இல்லை, வெறுப்பால் வாழ்வு துயரம் நிறைந்தது என்று இருப்பதும் இல்லை.

மின்னலுடன் மழை குளிர்ந்த துளியைப் பொழிவதால், அளவில்லாமல் கல்லின்மீது மோதுவதால் ஏற்படும் ஒலியுடன், பாய்ந்து ஓடக்கூடிய பொிய ஆற்று நீரின் மீது மிதந்து செல்லும் படகுபோல, அரிய உயிரும் முறை வழியே செல்லும் என்பதை அறிஞர்கள் இயற்றி நூல்கள் வழியே தெளிவாக அறிந்தோம். அதனால் யாம் மேன்மைமிகு பெரியோரைப் பாராட்டுதலும் இல்லை. அத்தகைய மேன்மை இல்லாதவரை இகழ்வதும் இல்லை.

# நெடுநல்வாடை

### கோவலர் வாடையால் துன்புறுதல்

மழை பொழிந்துகொண்டிருக்கிறது. கோவலர் தம் ஆனிரைகளை வேறு நிலப்பரப்பில் மேயவிட்டுக்கொண்டு புலம்புகின்றனர். அவர்கள் தலையில் வெண்காந்தள் பூவைச் சூடிக்கொண்டுள்ளனர். பனியோடு சேர்ந்து வாடைக்காற்று வீசுகிறது. தம் கைகளைக் கன்னத்தில் வைத்துக்கொண்டு நடுங்கிக்கொண்டிருக்கின்றனர்.

### கூதிர்க் கால நிலை

வாடைக்காற்றின் குளிர் தாக்குவதால் பசுக்கள் சரியாக மேயவில்லை. மரத்தில் இருக்கும் மந்திக் குரங்குகள் கூம்பிய நிலையில் அமர்ந்துகொண்டிருக்கின்றன. பறவைகள் பறக்காமல் நிலத்தையே விரும்புகின்றன. கன்றுக்குட்டிகள் கூடக் கறவை மாடுகளில் பால் குடிக்கவில்லை. இப்படிக் கடுமையான வாடைக்காற்று வீசுகிறது. இந்தக் காலத்தில் ஒருநாள் நள்ளிரவு.

### ஊரினது செழிப்பு

முசுண்டைக் கொடியில் பொறிப்பொறியாக வெண்ணிறப் பூக்கள் பூத்துக் கிடக்கின்றன. அதனோடு புதர் வேலிலியில் பீர்க்கம் பூ பொன் நிறத்தில் பூத்துக் கிடக்கிறது. ஈர மணலில் இருக்கும் பசுமை நிறக் கால்களை உடைய கொக்கு, சிவந்த கால்களை உடைய நாரை ஆகியவை எளிமையாகக் கவர்ந்துண்ணும்படி கயல் மீன்களை ஆற்று வெள்ளம் அடித்துவந்தது. பெயல் நின்றதும் வெண்மேகம் படர்ந்துவரும் மூடுபனி. வயலில் விளைந்திருக்கும் நெற்கதிர் வளைந்து தொங்குகிறது. பாக்கு மரத்தில் காய்கள் சதைப் பிடிப்புடன் முற்றித் தொங்குகின்றன. காட்டில் பூத்திருக்கும் குளிர்கால மலர்களில் பனித்துளிகள் தூங்குகின்றன.

### முழுவலி மாக்கள் தெருக்களில் சுற்றித் திரிதல்

பழமையான ஊர். வளமான ஊர். ஓங்கிய மாடமாளிகைகள். ஆறு போல் அகன்ற தெருக்கள். முழு வலிமை பெற்று முறுக்கான உடல் கொண்ட மக்கள். காவல் புரியும் மக்கள். படலைப் பூ மாலை தலையில் சூடியவர்கள். குளிரில் முதுகு கூனி முடக்கத்துடன் நடமாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் வண்டு மொய்க்கும் தேறல் பருகியிருக்கிறார்கள். பனித் துவலைகளை அவர்கள் பொருட்படுத்தவில்லை. இரட்டைத் துணியால் போர்த்துக்கொண்டிருக்கின்றனர். பகல் அல்லாத இரவிலும் விரும்பிய இடங்களிலெல்லாம் திரிகின்றனர்.

### மாலைக் காலத்தில் பெண்கள் தெய்வத்தை வணங்குதல்

மகளிர். பருத்த மார்பகத் தோள். வள்ளிக்கொடி எழுதப்பட்ட தோள். வெள்ளி நிறத்தில் வள்ளிக்கொடி எழுதப்பட்ட தோள். மெத்தென்ற உடம்பு. அழகு. முத்துப் போன்ற புன்னகை. காதுத் தொங்கல் குழையை விரும்பிப் பாய்வது போன்ற நீண்ட கண்கள். மழை போல் ஈரமான கண்கள். எழிலான கண்கள். இவற்றைக் கொண்ட மடவரல் மகளிர். மடப்பத் தன்மை உடைய மகளிர். இவர்கள் மாலைப் பொழுது என்று கணித்து அறிந்துகொள்கின்றனர். பூக்கூடையில் உள்ள பூ மலர்வதால் தெரிந்துகொள்கின்றனர். இரும்பால் செய்யப்பட்ட விளக்கில் திரியைத் திரித்து விட்டு விளக்கு ஏற்றுகின்றனர். நெல்லும் மலரும் தூவி வழிபடுகின்றனர். மாலைக்காலத்தை வழிபடுகின்றனர்.

### கூதிர்க்காலம் நிலைபெற்றமையால் நேர்ந்த விளைவுகள்

வீட்டுப் புறாக்கள். இணை புறாக்கள். செங்கால் புறாக்கள். ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்தே மேயும் பழக்கம் கொண்ட புறாக்கள். மன்ற வெளிகளில் மெயும் புறாக்கள். குளிர் மிகுதியால் அவை மேயவில்லை. மதலைப் பள்ளியில், மாட இருக்கையில் இடம் மாறி மாறி உட்காருகின்றன. இரவிலும் பகலிலும் ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டு மயங்கிக் கிடக்கின்றன.

பார்வை வினாக்கள்

*சிறு வினாக்கள்: (2 மதிப்பெண்கள்)*

1. தலைவனின் மனநிலையை நற்றிணை உணர்த்தும் பாங்கு யாது.
2. பதிற்றுப்பத்து உணர்த்தும் செல்கெழுகுட்டுவனின் வெற்றிச் சிறப்பைக் குறிப்பிடுக.
3. தோழி அறத்தொடு நின்றநிலையை அகநானூறு குறிப்பிடும் பாங்கு யாது?
4. சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே – இடம்சுட்டி பொருள் விளக்குக.
5.

*பெருவினாக்கள்: (6 மதிப்பெண்கள்)*

1. பரிபாடல் சுட்டும் வையையின் சிறப்புகளை தொகுத்துரைக்க.
2. நெடுநல்வாடை உணர்த்தும் கார்காலச் சிறப்புகளை எடுத்துரைக்க.
3. பரிபாடல் சுட்டும் வையையின் சிறப்புகளை தொகுத்துரைக்க.
4. நெடுநல்வாடை உணர்த்தும் கார்காலச் சிறப்புக்களை எடுத்துரைக்க.

KAHE

## UNIT-II

1. ‘வேட்டல்’ என்பதன் பொருள் ____________.

(அ). விருப்பம் (ஆ). வேண்டுதல் (இ). வேட்டையாடுதல் (ஈ). வணங்குதல்

2. நெய்தற்கலியில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?

(அ). 30 (ஆ). 33 (இ). 36 (ஈ). 39

3. ‘சுரம்’ என்பதன் பொருள் ____________.

(அ). காடு (ஆ). மலை (இ). வயல் (ஈ). கடல்

4. நெடுந்தொகை என அழைக்கப்படும் நூல் எது?.

(அ). புறநானூறு (ஆ). குறுந்தொகை (இ). கலித்தொகை (ஈ). அகநானூறு

5. நெடுநல்வாடையின் ஆசிரியர் யார்?

(அ). திருமூலர் (ஆ). திருநாவுக்கரசர் (இ). ஔவையார் (ஈ). நக்கீரர்

6. பழந்தமிழரின் வரலாற்று நூல் எது?

(அ). பரிபாடல் (ஆ).புறநானூறு (இ). ஐங்குறுநூறு (ஈ).பதிற்றுப்பத்து

7. ‘கற்பு’ என்பதன் பொருள் ____________.

(அ). ஒழுக்கம் (ஆ). கடவுள் (இ). ஈகை (ஈ). ஈட்டல்

8. குறுந்தொகையின் அடிவரையறை எத்தனை?

(அ). 9-12 (ஆ). 4-8 (இ). 3-5 (ஈ). 12-31

9. திணை - என்ற பெயரில் அமைந்த நூல் எது?

(அ) அகநானூறு (ஆ) புறநானூறு (இ) நற்றிணை (ஈ) குறுந்தொகை

10. குறுந்தொகையைத் தொகுத்தவர் பெயர் என்ன?

(அ) பூதங்கண்ணனார் (ஆ) பூரிக்கோ (இ) பெயர் தெரியவில்லை (ஈ) அம்மூவனார்

11. ஐங்குறுநூற்றின் அடிவரையறை எத்தனை?

(அ) 4-8 (ஆ) 3-6 (இ) 9-12 (ஈ) 5-10

12. “சிதைந்தது மன்ற, நீ சிவந்தனை நோக்கலின்”- என்ற பாடலடி இடம்பெறும் நூல் எது?

(அ) அகநானூறு (ஆ) நற்றிணை (இ) பதிற்றுப்பத்து (ஈ) குறுந்தொகை

13. பரிபாடலில் உள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?

(அ) 70 (ஆ) 22 (இ) 400 (ஈ) 500

14. செவ்வேள் எனச் சுட்டப்படும் தெய்வத்தின் வேறுபெயர் என்ன?

(அ) திருமால் (ஆ) முருகன் (இ) சிவன் (ஈ) பிரம்மன்

15. கைக்கிளை, பெருந்திணை, மடலேறுதல் ஆகியவற்றைப் பாடும் நூல் எது?

(அ) பதிற்றுப்பத்து (ஆ) புறநானூறு (இ) கலித்தொகை (ஈ) நற்றிணை

16. ஒற்றைப்படை எண்ணிக்கையில் அமையும் பாடல்கள் எத்திணைக்குரியது?

(அ) குறிஞ்சி (ஆ) முல்லை (இ) மருதம் (ஈ) நெய்தல்

17. நெடுநல்வாடைப் பாடலின் ஆசிரியர் யார்?

(அ) நக்கீரர் (ஆ) அம்மூவனார் (இ) பூரிக்கோ (ஈ) கபிலர்

18. நற்றிணையின் அடிவரையறை?

அ) 3-6 ஆ) 3-9 இ) 4-8 ஈ) 9-12

19. ஐங்குறுநூற்றுப் பாடல்கள் எப்பா வகை?

அ) ஆசிரியப்பா ஆ) அகவற்பா இ) விருத்தப்பா ஈ) கலிப்பா

20. தொடர்ந்த குவளை எனும் பதிற்றுப்பத்துப் பாடலைப் பாடியவர்_________.

அ) பெருங்கடுக்கோ ஆ) இரும்பொறை இ) பாலைக்கொளதமனார் ஈ) ஓதலாந்தை

21. கலித்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்?_.

அ) நல்லந்துவனார் ஆ) நல்லுருத்திரனார் இ) மருதனிள நாகனார் ஈ) . கபிலர்

22. பரிபாடலில் வையை பற்றி உள்ள பாடல்களின் எண்ணிக்கை?.

அ) 8 ஆ) 22 இ) 6 ஈ) 7

23. தீதும் நன்றும் பிறர் தர வாரா என்னும் வரிகள் இடம்பெற்ற நூல் எது?

அ) அகநானூறு ஆ) பட்டினப்பாலை இ) புறநானூறு ஈ) மதுரைக்காஞ்சி

24. அகநானூற்றின் ஒற்றைப்படை எண்களில் வரும் பாடல்கள் எத்திணைக்குரியன______ .

அ) நெய்தல் ஆ) குறிஞ்சி இ) முல்லை ஈ) பாலை

25. நெடுநல்வாடை என்னும் நூலின் ஆசிரியர்__________.

அ) கபிலர் ஆ) நக்கீரர் இ) பரணர் ஈ) ஓதலாந்தையார்

26. எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவதாக இடம் பெறும் நூல்-----.

(அ) குறுந்தொகை (ஆ) கலித்தொகை (இ) பரிபாடல் (ஈ) புறநானூறு

27. மாட்சி என்பதன் பொருள் யாது?

(அபெருமை (ஆ) சிறுமை (இ).உயர்வு (ஈ). தாழ்வு

28. கேளிர் என்பதன் பொருள் யாது?

(அ). உறவினர் (ஆ). சுற்றத்தார் (இ). பகைவர் (ஈ).நண்பர்

29. வண்ணச்சீறடி மண்மகள் அறிந்திலள் என்ற பாங்கில் வளர்க்கப்பட்டவள்-----.

(அ). கண்ணகி (ஆ). மாதவி (இ). மணிமேகலை (ஈ). வசந்தமாலை

30. வையை பற்றிய சிறப்புகளைக் கூறும் நூல் எது?

அ) பதிற்றுப்பத்து ஆ) குறுந்தொகை இ) பரிபாடல் ஈ) புறநானூறு

31. ஐங்குறுநூறுப் பாடல்கள் எப்பாக்களால் ஆனவை?

அ) அகவற்பா ஆ) கலிப்பா இ) வஞ்சிப்பா ஈ) வெண்பா

23. சேர அரசர்களின் வரலாற்றினை அறிய உதவும் நூல் எது?

அ) பதிற்றுப்பத்து ஆ) நற்றிணை இ) குறுந்தொகை ஈ) கலித்தொகை

33. கலித்தொகையின் கடவுள் வாழ்த்து பாடலைப் பாடியவர் யார்?

அ) நல்லந்துவனார் ஆ) கபிலர் இ) பெருங்கடுங்கோன் ஈ) பனம்பாரனார்

34. ‘சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவையும்’ என்ற பாடல்வரி இடம் பெற்றுள்ள நூல் எது?

அ) பதிற்றுப்பத்து ஆ) கலித்தொகை இ) அகநானூறு ஈ) நற்றிணை

35. நித்திலக்கோவையில் இடம் பெறும் பாடல் எண்ணிக்கை எத்தனை?

அ) 120 ஆ) 200 இ) 100 ஈ) 180

36. சங்ககாலத் தமிழகத்தின் வரலாற்று நூலாகத் திகழ்வது எது?

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) பரிபாடல் ஈ) புறநானூறு

37. பாண்டிய மன்னனின் அடையாளப் பூ எது?

அ) அத்திப் பூ ஆ) வேப்பம் பூ இ) பனம் பூ ஈ) காந்தள் பூ

## UNIT-III

## SYLLABUS

| |
|---|
| **அலகு - III : காப்பியம் : காப்பியம் குறித்த அறிமுகம், சிலப்பதிகாரம், மணிமேகலை** |

**(அ). சிலப்பதிகாரம்:**

**மங்கல வாழ்த்துப் பாடல்:** (21-29)- நாக நீள் நகரொடு-கண்ணகி என்பாண் மன்னோ .

வழக்குரை காதை, (48-56) - நீர்வார் கண்ணை-புகாரென்பதியே .

**வஞ்சின மாலை:** (5-34) - வன்னிமரமும் – பிறந்த பதிப் பிறந்தேன்.

**நடுகற் காதை:** (207-234) - அருத்திற லரசர் – மன்னவ ரேறென்,.

**வாழ்த்துக்காதை:** (9) - என்னேயிஃ தென்னே – மீவிசும்பிற் றோன்றுமால்.

**(ஆ). மணிமேகலை:**

**பசியின் கொடுமை: பாத்திரம் பெற்ற காதை:**

'போதி நீழல்' - 'பெருகியதன்றோ' , 'ஆற்றுநர்க்களிப்போர்' - 'நல்லறம் கண்டனை' (73-98).

**சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை:**

மாவண் கிள்ளிக்கு காவலன் உரைத்தவை:

'பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்து -

அரவோர்க் காக்கினன் அரசாள் வேந்தன்' (116-163).

## அலகு: 3 .

## 1. சிலப்பதிகாரம்

**மங்கல் வாழ்த்துப்பாடல்-கண்ணகி அறிமுகம் - கண்ணகியின் சிறப்பு:**

சுவர்க்கத்தினும் மேலான சிறப்புக்களையுடைய நாகலோகத்தில் உள்ள நாகநாட்டிற்கு இணையான, நிலைத்த புகழை உடையது புகார் நகரம். அந்நகரில் மழைமேகத்தை ஒத்த கொடைவண்மை உடைய மாநாய்கன் என்பானது மகள், 12 வயதுடையவள். அவள் திருமகளை ஒத்த வடிவத்தை உடையவள், அருந்ததியை ஒத்த கற்புத்திறத்தை உடையவள். உலகினர் புகழும்படியான பெருங்குணத்தை உடைய அவளது பெயர் கண்ணகி என்பதாகும்.

**வழக்குரை காதை-மன்னவன் வினாவும் கண்ணகி விடையும்:**

வாயில் காப்பவன் வந்து கண்ணகியை அரசன்முன் அழைத்துப் போய் நிறுத்திக் கண்ணகி அரசனைச் சென்று கண்டாள், தன் முன் அழுத கோலத்துடன் நிற்கும் கண்ணகியைப் பார்த்த பாண்டியன், கண்ணீர் சிந்திக் கலங்கி என் முன் வந்து நிற்கும் பெண்ணே நீ யார் எனக் கேட்டான். ஆராய்ந்து அறியாத மன்னவனே, நான் யார் என்று சொல்கிறேன், கேட்டுக் கொள்வாயாக. போற்றக் கூடிய பெருமை உடைய விண்ணவர்களே கண்டு வியக்கின்ற சிறப்புடைய ஒரு புறாவுக்கு உற்ற துன்பத்தைப் போக்கிய சிபி சக்கரவர்த்தியும்,அரண்மனைவாசலில் கட்டிய ஆராய்ச்சி மணியின் நாக்கு நடுங்க, ஒலிஎழுப்ப,கண்ணின் கடைமணியில் கண்ணீர் வடிய நின்ற பசுவுக்கு உண்டான துன்பத்தைப் போக்குவதற்காகத் தன்னுடைய அருந்தவப் புதல்வனைத் தேர்ச்சக்ரத்தின் கீழ் கிடத்திக் கொன்ற மனுநீதிச்சோழன் போன்ற பெருமைக்குரியவர்களும் ஆண்ட புகழ்மிக்க பேரூர் -பூம்புகார். பெருமை மிகு அப்புகாரில் பிறந்தவள் நான். அவ்வூரில் வாழந்த, குறையில்லாத சிறப்புடைய, மாசாத்துவான் எனும் பெருங்குடி வணிகனின் மகனாகப் பிறந்து, பொருளீட்டி வாழவேண்டி முன்செய்த தீவினை வந்து தூண்ட, வீரக் கழல் அணிந்த மன்னனே, உன்னுடைய நகருக்குள் வந்து என்கால் சிலம்பு ஒன்றை விற்க முன்ற போது உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி நான். என் பெயர்- கண்ணகியாகும் -என்று கூறியதும், மன்னன் கண்ணகியைப் பார்த்துப் பெண்ணே, கள்வனைக்கொல்வது குற்றம் அன்று, நல்ல ஆட்சி முறைமைக்கு அதுதான் அடையாளம் என்பதை நீ உணர வேண்டும் என்றான்.

**வஞ்சின மாலை - பத்தினிப் பெண்டிர் எழுவர் காதை:**

**1. கற்புடைய பெண்கள் பெருமை:** வன்னி மரத்தடியில் வந்து தங்கிய வழிப்போக்கன் ஒருவன் பாம்பு கடித்துச் சாக, அவனுடன் வந்த கன்னி, அழுது புலம்ப, இறைவன் அருளால் இறந்தவன் பிழைத்தெழுந்தான். இதைத் தன் ஊரில் உள்ளவர்கள் நம்ப மறுத்தபோது அவர் உயிர்த்தெழுந்த இடத்தில் இருந்த, வன்னி மரத்தையும், உணவு சமைக்கும் இடத்தையும் அருகிருந்த கிணற்றையும் தன் ஊருக்குச் சாட்சியாக வரவழைத்துக் காட்டினாள்.

இன்னொருத்தி, தோழிப் பெண்களுடன் காவிரிக்கு நீராடப்போனாள். அவளுடைய தோழிப் பெண்களில் ஒருத்தி கரையில் மணலால் பிடித்து வைத்த உருவத்தை இது தான் உன் கணவன் என்று விளையாட்டாகச் சொல்லி வைக்க, அவள் அதையே மெய்யாக ஏற்றுக் கொண்டு, தோழிப் பெண்களுடன் வீடு திரும்பாமல், காவிரி நீர் அலைகள் அந்த மண் உருவை அழித்துவிடாதவாறு அதனைச் சுற்றி மணலைக் குவித்து வைத்துக்கொண்டு அங்கேயே கிடந்தாள்.

மன்னன் கரிகால் பெருவளத்தான் மகள் ஆதிமந்தி. ஆவள் தான் விரும்பிய வஞ்சி நாட்டரசன் ஆட்டனத்தியை மணந்தாள். நீராடச் சென்ற அவனைக் காவிரி வெள்ளம் அடித்துச் சென்று விட்டது. ஆதிமந்தி அவனைத் தொடர்ந்து காவிரி நீர் ஓடும்வழியே ஓடினாள். முடிவில் காவிரி நீரோடு கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டான். அதுகண்டு மனம் பதைத்த ஆதிமந்தி, மலை போன்ற தோளுடைய என் மன்னவனே என்று புலம்பித் துடித்தாள். கடல் ஆட்டனத்தியை, ஆதிமந்தி முன் கொண்டு வந்துவிட்டது. மீண்ட காதலனைத் தழுவிக் கொண்டு பொன் கொடி போலப்போனாள் ஆதிமந்தி.

இன்னொருத்தி, மணல் நிறைந்த கடற்கரைச் சோலையிலே, கரை நோக்கி வரும் கலங்களிலே தன் கணவன் வருவதைக் காணும் வரை கல்லாய் நின்று, தன் கணவன் வரக் கண்டதுமே கல்லுருவம் விட்டுப் பெண்ணுருவம் பெற்றாள்.

மற்றும் ஒருத்தி, தன் கணவனின் இன்னொரு மனைவியின் குழந்தை கிணற்றில் விழுந்து விடத் தன் குழந்தையையும் கிணற்றுக்குள் போட்டு, இரண்டு குழந்தையையும் பின் தன் கற்புத்திறத்தால் வெளியே எடுத்தால்

மாற்றான் ஒருவன் தன்னைத் தொடர்ந்து பார்க்கும் பார்வையின் குறிப்பறிந்து, தன்னுடைய மதிபோன்ற அழகிய முகம் குரங்கினுடைய முகமாக மாறவேண்டிக் கொண்டு, அவ்வாறே வெளியூர் போன கணவன் வீடு திரும்பும் வரை குரங்கு முகுத்துடனேயே இருந்து, கணவன் வந்தவுடன் குரங்கு முகம் விடுத்துத் தனது அழகிய திருமுகத்தை மீண்டும் பெற்றுக்கொண்டாள், பூப்போலும் பெண் ஒருத்தி.

சிறந்தவர் பெண்கள் என்றாலும், அவர்கள் அறிவுத்திறம் பழுதுடையதே என்று கற்றறிந்த பெரியோர்கள், கூறியதன் உண்மைப்பொருளை உணராமல், நான் சிறியவளாய் இருக்கையில், தோழிப் பெண்களுடன் கூடி விளையாடிக் கொண்டிருந்த போது என் தோழியைப் பர்த்து எனக்கு ஒரு மகள் பிறந்து உனக்கொரு மகன் பிறந்தால், என் மகளுக்கு உன் மகனே கணவன் என்று விளையாட்டாகச் சொன்னதை அவள் தாய் நிசம் என்றே நம்பி இன்று என்னிடம் வந்து தன் மனவருத்தம் கூறக்கேட்டு என் உள்ளம் துடித்தது. இதைக் கேட்ட மற்றொருத்தி புத்தாடை உடுத்தி, பூ முடித்து அவனை நான் மணப்பேள் என்று கூறித் தவிக்கும் தாய் வருத்தம் தவிர்த்தாள். இப்படிப்பட்ட பத்தினிப் பெண்கள் பலர் பிறந்த பூம்புகார் நகரில் பிறந்தவள் நான்.

**நடுகல் காதை-சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்தல்:**

**1. கற்புடைப்பெண்களே! பொற்புடைச் செல்வம்:** நாடாளும் மன்னன் நீதிநெறி தவறாது அரசாண்டால் மட்டுமே, பெருமைக்குரிய பெண்களின் கற்புத்திறம் சிறப்புடையதாகத் திகழும் என்பது முன்னோர் கூற்று. பூவுலகினர் போற்றும் பெருமையை உடையவள் கற்புடைச் செல்வி கண்ணகி. ஆதலின்,ஆத்திமாலை சூடிய ஆரசாளும் மன்னனுக்கு அத்தமிழ் உரை அறியச் செய்து செங்கோல் தவறினால் தன் உயிர் மாய்த்துக் கொள்ளும், தென்னாட்டு ஆட்சிக் காவலைப் பாண்டியனுக்குத் தந்து,

**2. கோட்டமும் கோயிலும் கும்பிடச் சிலையும்:** வீரமிகு அரசர்கள் தாம் உரைத்த சூளுரை நிறைவேறிய பின்னரே தங்கள் கோபத்தை விடுவர் என்பதை வடநாட்டு ஆரிய அரசர்கள் அறியச் செய்த, குடதிசைக் கோமான் சேர வேந்தனுக்குத் தந்து, மதுரை மாநகரம் அழிய, கோபக்கனல் பறக்கத் தன் மார்பைப் பிய்த்தெறிந்துவிட்டு, தம்முடைய நாட்டுக்கு வந்து, குளிர்ந்த தளிருடைய கிளையோடு கூடிய பொன்மலர் பூக்கும் வேங்கை மரநிழலில், வந்து நின்ற பெண்ணுக்கு, அந்தணர், ஆசான், நிமித்திகன், சிற்பிகளோடு சென்று, வானவர்களும் விரும்பும் சிற்ப நூல் வல்ல கலைஞர்களால் சிறப்புறக் கட்டி முடிக்கப் பட்ட. பத்தினிக் கோட்டத்தில் வானவர் வாழும் இமய மலை உசிசியிலே எழுந்தருளிருக்கும் கடவுளைப் போற்றி வணங்கி, சிற்பத்திறன் மிகுந்த வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்ட தெய்வத்திருவுருவை, கைத்தொழில் தேர்ந்தவர்கள் செய்த அணிகலன்கள் எல்லாம் சாத்தி விழாவும் வேள்விகளும் நடத்தி பிரதிட்டை செய்தான். வட நாட்டு மன்னர்கள் எல்லாரும் வணங்கிய பெரும் பெயர்ப் புகழ்ச் சேர வேந்தன் செங்குட்டுவன்.

**வாழ்த்துக்காதை-செங்குட்டுவனுக்குக் கண்ணகி, வானில் காட்சியளித்தல்:**

‘‘என்ன அதிசியம்? இது என்ன அதிசியம்? அதிசியத்திலும் இது பேரதிசியமாக அல்லவா உள்ளது! போன்னாலான சிலம்பும், மேகலை பூட்டிய இடையும்,வளையல் அணிந்த கையும், நல்ல வயிரம் பதித்த பொன் தோடும், இன்னும் பொன்னாலான பல அணி மணிகளையும் சூடிய மின்னல் கொடி போலும் ஒரு பெண் உருவம் விண்ணில் தெரிகின்றதே’’ என்றான்.

## 2. மணிமேகலை

**பாத்திரம் பெற்ற காதை: பசியின் கொடுமை**

தீவதிலகை அறிவுறுத்தியபடி, மணிமேகலை, கோமுகிப் பொய்கையை வலம் வந்து, அட்சயபாத்திரத்தைப் பெற்றாள். அங்கு, தீவதிலகை கூறுகின்ற அறவுரையைக் கேட்டபடி நின்றிருந்தாள். யாருக்கும் எளிதில் கிடைக்காத அட்சயபாத்திரத்தைக் கொண்டு, மணிமேகலை செய்யவேண்டிய நல்லறம் குறித்தும், அச்சேவையின் உயர்வு குறித்தும் மணிமேகலைக்கு தீவதிலகை அறிவுறுத்தினாள்.

தீவதிலகை போதிமரத்தின் நிழலிலே காட்சியளிக்கும் புத்த பெருமானுடைய திருவடிகளைப் பிறவிப்பிணி தீரும் பொருட்டு வாழ்த்தி வணங்கினாள். பின்னர், மணிமேகலைக்கு அறவுரை கூறினாள். மக்களுக்கு வருகின்ற பசிப்பிணி என்று கூறப்படுகின்ற பாவியானது, உயர்ந்த குடியிற் பிறந்தவர்களுக்கு இயல்பாகவே அமைகின்ற உயர்ந்த பண்புகளை அழித்துவிடும். சிறப்புடைய உள்ளத்தின் அழகையும், உடலின் அழகையும் அழித்துவிடும். தாம் மணந்துகொண்ட வாழ்க்கையைத் துணைவியோடு, தன்மான்மில்லாமல் பிறரது வீட்டுவாசலில் நின்று பிச்சை ஏற்கச்செய்யும். கொடியதாகிய இப்பசிப்பிணியைத் தீர்ப்பவருடைய புகழானது, எவ்வளவு பேசினாலும் தீராதது.

**சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை: மாவண்கிள்ளியிடம், காவலன் உரைத்தவை:**

பசிய மாட்டுச்சாணத்தால் மெழுகப்படாமல், சுத்தமான தங்கத்தால் தளமிடப்பட்ட மண்டபத்திலே தேவேந்திரன் போன்ற பெரிய செல்வச் சிறப்புடைய சோழ மன்னன் சென்று அமர்ந்தான். மன்னவன் இருக்குமிடம் கேட்டு மண்டபத்திற்கு வந்த சிறைக் கோட்டக் காவலர் தம் வரவினை வாயில் காவலருக்கு அறிவித்து, அரசனுடைய கட்டளை பெற்று மண்டபத்துள்ளே புகுந்தனர். அரசன் கண்படும் தொலைவில் நின்று அவன் திருவடி நோக்கி நிலத்தில் வீழ்ந்து வணங்கிக் கூறத்தொடங்கினர்; வாழ்க! எங்கள் கோமான். ஒரு பொழுதும் குறையாத மண்ணை விரும்பிப் பகைவர் மேல் போர் தொடர்ந்து வெற்றி பெறும் மன்னவனே, வஞ்சி மாநகரத்தில் புகுந்து வஞ்சிப் பூமாலையைச் சூடி யானை, தேர், குதிரைப் படைகளையும், மறப்பண்புடைய நெடிய வாள் முதலிய படைக்கலமேந்தும் போர் மறவரும் ஆகிய நாற் பெரும் படைகளும் நிறைந்த; தலைமைத் தன்மை பொருந்திய காலாட்படையோடு வந்து போர் செய்து சேர மன்னனும் பாண்டிய மன்னனும் ஆகிய வேந்தர் இருவரையும்; போர் வேல் ஏந்திய பெரிய கையையும் ஆத்திப்பூவாற் றொடுக்கப்பட்ட மாலையினையும் உடைய தங்கள் இளைய வேந்தனை ஏவி காரியாறு என்னும் இடத்தில் பொருது வென்று அவருடைய விற் கொடி மற்றும் மீன் கொடி ஆகிய அடையாளக் கொடியிரண்டையும் ஒரு சேரக் கைப்பற்றிக் கொண்டவனே. குடிமக்களுக்கு அருள் செய்து பாதுகாக்கும் வெண்கொற்றக் குடையையும் பகைவரைக் கொன்று நூழில் ஆட்டுதற்கியன்ற வலிய பெரிய கையையும் பெரிய வள்ளன்மையையும் உடைய கிள்ளிவளவனாகிய எங்கள் கோமான்; புகழோடு ஊழி பலப்பல இனிது வாழ்க; மன்னவனே, இது கேள். வேந்தர் வேந்தே, எளியேம் விண்ணப்பம் இதனைத் திருச்செவி ஏற்றருள்க; நின்னுடைய பகைவர் கெட்டொழிக! என்று வாழ்த்திக் கூறி,

யானைத் தீ என்னும் நோயாற் பற்றப்பட்டு அது செய்யும் துன்பத்திற்கு ஆற்றாமல் உடம்பு வாடி இரத்தற் பொருட்டு இப் பெரிய நகரத்தில் தெருக்கள் தோறும் திரிகின்ற இந்நகரத்திற்குப் புதியவளாகிய ஓர் இரவன் மகள்; தப்புதற் கரிதாகிய நமது சிறைக் கோட்டத்தினுள்ளே புகுந்து; பெரிய புகழையுடைய அரசே நின் திருப்பெயரை எடுத்துக் கூறி வாழ்த்தி; பிச்சைப் பாத்திரம் ஒன்றனைக் கைக்கொண்டு நின்று தன்னைச் சூழ்ந்து கொள்கின்ற ஆற்றாமாக்கள் அனைவர்க்கும் வேண்டுமளவு உண்ணும்படி உணவு வழங்குகின்றாள், வாழ்க எங்கள் கோமானாகிய மன்னவனே என்று வாழ்த்தினான்.

**அரசவைக்கு மணிமேகலையின் வருகை:**

அவ்வற்புதம் கேட்டு வியப்புற்ற அரசனும், ‘அத்தகைய சிறப்புடைய பெண்ணுக்கு நம்மால் இயன்றவகையில் உதவுதல் வேண்டும்!’ என்னும் ஆர்வத்துடன், அப்பெண்ணை இங்கு அழைத்து வருக! என்று வாயில் காப்பாளர்களுக்குக் கட்டளையிட்டான். அரசனுடைய வரவேற்பை அறிவித்த வாயில் காப்பாளர்களோடு, காயசண்டிகையின் உருவத்திலிருந்த மணிமேகலை, அரசன் முன் சென்று நின்றாள். அவளைக் கண்ட மன்னனும், ‘வருக! வருக!’ என்று அவளை மகிழ்வுடன் வரவேற்றான். அழகிய வீரக்கழல் கட்டிய திருவடியையுடைய அரசர் பெருமானுடைய அருள் நெடிது வாழ்க! என்று வாழ்த்தினாள். அது கேட்டு மகிழ்ந்த அம் மன்னவன், தாங்குதற்கு அரிதான தவ ஒழுக்கத்தையுடைய பெண்ணே! நீ யார்? உன் கையிலேந்திய தெய்வத்தன்மையுடைய இத்திருவோடு நின் கையில் எவ்வண்ணம் வந்தது? என்று வினவினான்.

**மணிமேகலை, மன்னனுக்கு உரைத்தவை:**

அது கேட்ட மணிமேகலை, “மணமிக்க ஆத்தி மாலையையுடைய அரசே நீ நீண்ட காலம் வாழ்வாயாக!; யான் ஒரு வித்தியாதர மகளாவேன், திருவிழாக்களாலே நாடோறும் அழகு பெறுகின்ற பழைய இம்மாநகரத்தில் நான் இதுவரை என்னை இன்னவள் என யாருக்கும் அறிவிக்காமல் திரிந்தேன். என்னை ஒரு பொருட்டாக மதித்தழைத்த உன் பெருந்தகைமை வாழ்க!; உன்னாட்டில் மழைவளம் வாய்ப்புடையதாகுக! உன்னுடைய நாட்டில் வளம்பலவும் பெருகுக! இங்கே பெருமானுக்குச் சிறிதும் தீமை இல்லையாகுக! என் கையிலேந்திய இப்பாத்திரம் நான் ஏற்றுண்ணும் பிச்சைப் பாத்திரமாகும். இது உலகவறவியின் பக்கத்திலே ஒரு தெய்வத்தால் வழங்கப்பட்டது. அக்காரணத்தாலே தெய்வத்தன்மை யுடையதுமானது. ஆனைத்தீ நோய் என்னும் கொடிய நோய் காரணமாகத் தோன்றிய உய்தற்கரிய பெரும் பசியையும் இது தீர்த்திருக்கின்றது. பசிப்பிணியாலே உடலும் உடைந்து வருந்தி ஆற்றாத மக்களுக்கு இப்பாத்திரம் அப்பிணி தீர்த்து உயிர் தந்து ஓம்பும் மருந்துமாகும்” என்று கூறினாள்.

**மன்னனிடம் மணிமேகலையின் விண்ணப்பம்:**

அது கேட்ட அரசன் மணிமேகலையை நோக்கி “இளமை மிக்க உனக்கு நான் செய்யத் தகுந்த உதவி என்ன?” என்று கேட்டான். “அரசே நீ எனக்குச் செய்யும் உதவியும் ஒன்று உள்ளது. அஃதாவது சிறையிடப்பட்டோர் இருக்கின்ற அச்சிறைக்கோட்டத்தை (சிறைச்சாலையை) இடித்து அகற்றி அவ்விடத்தைத் துறவறத்தோர் இருக்கும் தவப்பள்ளியாக அமைக்க வேண்டும். அதுவே, நான் தங்களிடம் வேண்டுவது. வேந்தர் பெருமான் நீடுழி வாழ்க! என்று சொல்லி வாழ்த்தினாள். செங்கோன்மை பிறழாது அரசாட்சி செலுத்தும் அக்கிள்ளிவளவனும் இளங்கொடி கூறியபடிச் செய்வேன் என்று உடன்பட்டு; அருமையான

துன்பத்தைத் தருகின்ற சிறையில் தண்டனை பெற்றிருந்தோரை எல்லாம் தப்புதற்கரிய அச்சிறைக் கோட்டத்தினின்றும் விடுதலை செய்து, பெரிய தவத்தையுடைய அறவோரைப் பேணும், அற முதலிய பெருமையுடைய உறுதிப் பொருளை எய்த விரும்பிய துறவோர் வாழும் அறக்கோட்டமாக மாற்றினான்.

பார்வை வினாக்கள்

***சிறு வினாக்கள்:*** ***(2 மதிப்பெண்கள்)***

1. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்த நிகழ்வினைச் சுட்டுக.

2. மணிமேகலை சிறுகுறிப்பு வரைக.

***பெருவினாக்கள்:*** ***(6 மதிப்பெண்கள்)***

1. சிலப்பதிகாரம் கூறும் பத்தினிப் பெண்டிர் எழுவர் கதையினை விவரிக்க.

2. மணிமேகலையில் பாத்திரம் பெற்ற காதையின் சிறப்பியல்புகளை விரித்துரைக்க.

3. பசியின் கொடுமை பற்றி மணிமேகலை கூறும் செய்தியை விளக்குக.

4. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதை சிலப்பதிகாரம் கொண்டு விரித்துரைக்க.

KAHE

# UNIT-III

1. கண்ணகி பிறந்த ஊர் எது?

(அ). மதுரைநகர் (ஆ). வஞ்சிநகர் (இ). புகார்நகர் (ஈ). திருவாதவூர்

3. 'கம்மியர்' என்பதன் பொருள் ____________.

(அ). சிற்பி (ஆ). தச்சன் (இ). நெய்பவர் (ஈ). கோலம் இழைப்பவர்

4. கீழ் குறிப்பிடுவனவற்றில் பௌத்த சமயக் காப்பியம் எது?

(அ). சிலப்பதிகாரம் (ஆ). மணிமேகலை (இ). நீலகேசி (ஈ). சீவகசிந்தாமணி

5. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்ற வரி இடம்பெறும் நூல் ____________.

(அ). சிலப்பதிகாரம் (ஆ). மணிமேகலை (இ). நீலகேசி (ஈ). சீவகசிந்தாமணி

6. 'அம்பலம்' என்பதன் பொருள் ____________.

(அ). கோயில் (ஆ). வீடு (இ). நாடு (ஈ). தெரு

7. கண்ணகியின் தந்தை பெயர் என்ன?

(அ) மாநாய்கன் (ஆ) மாசாத்துவன் (இ) கோவலன் (ஈ) இளங்கோவடிகள்

8. பௌத்த காப்பியம் என்று அழைக்கப்படும் நூல் எது?

(அ) சிலப்பதிகாரம் (ஆ) மணிமேகலை (இ) நீலகேசி (ஈ) குண்டலகேசி

9. மணிமேகலைக்கு அமுதசுரபியை வழங்கிய தெய்வம்__________.

அ) மணிமேகலா ஆ) சம்பாபதி இ) தீவதிலகை ஈ) காயசண்டிகை

10. ஆற்றுநர்க் களிப்போர் எத்தகையவர்________.

அ) நாணத்தை விடுவோர் ஆ) அறம்புரிவோர் இ) அறத்தை விலைபேசுவோர்
ஈ) பண்பின்மிக்கோர்

11. மணிமேகலை எச்சமய நூல்?

அ) சமணம் ஆ) பொளத்தம் இ) ஆசீவகம் ஈ) சைவம்

12. மணிமேகலைக் காப்பியத்தில் யானைத் தீ நோயால் பாதிக்கப்பட்டவள் யார்?

அ) சித்ராபதி ஆ) தீவதிலகை இ) காயசண்டிகை ஈ) சுதமதி

13. பத்தினிப் பெண்டிர் எழுவரின் வரலாறு இடம் பெற்றுள்ள நூல் எது?

(அ)சிலப்பதிகாரம் (ஆ). மணிமேகலை (இ).கலித்தொகை (ஈ). அகநானூறு

14. கண்ணகிக்கு கோயில் எடுத்த அரசன் ----?

(அ). சேரன் செங்குட்டுவன் (ஆ). இளங்கிள்ளி (இ) மாவண்கிள்ளி (ஈ) உதயகுமாரன்

15." உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று வலியுறுத்துகின்ற இலக்கியம் --

(அ). சிலப்பதிகாரம் (ஆ). மணிமேகலை (இ). நீலகேசி (ஈ). சீவகசிந்தாமணி
அ) அந்தணன் ஆ) பாண்டியன் இ) சேரன் ஈ) சோழன்

16. மாதரார் தொழுதேத்தி வணங்கியவர் யார்?

அ) கண்ணகி ஆ) மாதவி இ) தேவந்தி ஈ) மாதரி

17. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என உரைக்கும் நூல்?
அ) சிலப்பதிகாரம் ஆ) சூளாமணி இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

18. திருந்தா நாயுன் தின்னுதலுறுவோன் யார்?
அ) காஞ்சனன் ஆ) விசுவாமித்திரர் இ) உதயகுமாரன் ஈ) மாவண்கிள்ளி

## UNIT-IV

## SYLLABUS

**அலகு – IV : கட்டுரைகள்: 1.** தமிழிசை இயக்கம், 2. தனிப்பாடல்கள், 3. கலைச்சிறப்பு, 4. காளத்திவேடனும் கங்கைவேடனும், 5. ஏட்டில் இல்லாத இலக்கியம்

1. தமிழிசை இயக்கம் – பேரா. க. வெள்ளைவாரணர்
2. தனிப்பாடல்கள் – பேரா. வ. சுப. மாணிக்கனார்
3. கலைச்சிறப்பு – முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்
4. காளத்திவேடனும் கங்கைவேடனும் – சொல்லின்செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை
5. ஏட்டில் இல்லாத இலக்கியம் – ஔவை துரைசாமி

KAHE

## 1. வெள்ளைவாரணர்

வெள்ளைவாரணர் தஞ்சை மாவட்டம் குடந்தை வட்டம் திருநாகேசுவரத்தில் 1917இல் பிறந்தார். இவரது பெற்றோர் அமிர்தம் அம்மையார், கந்தசாமி முத யார் ஆவர். வெள்ளைவாரணர் 1934 முதல் 1979 வரை அண்ணமாலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பணியாற்றிப் பெரும்புகழ் பெற்றார். தமிழகப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் பாடத்திட்டக்குழு, தேர்வுக்குழு, ஆளவை, ஆட்சிக்குழு உறுப்பினராய்த் திகழ்ந்தவர். தமிழகப் புலவர் குழுவின் உறுப்பினராகவும், பண்ணாராய்ச்சிக் குழுவின் உறுப்பினராகவும் விளங்கிய பெருமைக்குரியவர். வெள்ளைவாரணர் தொல்காப்பியம், சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம் எனத் தமிழின் அனைத்துத் துறைகளிலும் புலமை வாய்ந்த பேரறிஞர். இவர் இயற்றிய நூல் காக்கை விடுதூது காக்கையைத் தூதாக அனுப்புவது மரபில்லை. இருப்பினும், இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்குதல் என்ற கொள்கையினை எதிர்த்து தமது வெறுப்பினைக் காட்டுவதற்காகவும், தமிழ்மொழியின் தொன்மையினை நிலைநாட்டுவதற்காகவும் காக்கையைத் தூதாகத் தேர்ந்தெடுத்து காக்கைவிடு தூது படைத்துள்ளார். சங்ககாலத் தமிழ்மக்கள், குறிஞ்சிப் பாட்டாராய்ச்சி, தமிழிலக்கிய வரலாறு, (தொல்காப்பியம்), தொல்காப்பியம் நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பீடு, சொல்லதிகாரம் ஒப்பீடு, சேக்கிழார் நூல்நயம், பன்னிரு திருமுறை வரலாறு, தில்லைப் பெருங்கோயில் வரலாறு, திருவருட் பாச சிந்தனை, இசைத்தமிழ், திருத்தொண்டர் வரலாறு, தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு, சைவ சித்தாந்த சாத்திர வரலாறு ஆகிய திறனாய்வு நூல்களையும் எழுதியுள்ளார். இவற்றுள் பன்னிரு திருமுறை வரலாறும், திருவருட்பா சிந்தனையும் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழக முதல் பரிசினைப் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. 16.2.15. பதிப்பித்த நூல்கள் வெள்ளைவாரணர், பரதசங்கிரகம், கம்பராமாயணச் செம்பதிப்பு எனும் இரு நூல்களையும் பதிப்பித்துள்ளார்.

## 2. வ.சுப. மாணிக்கம்

சிறந்த தமிழறிஞர், கவிஞர், பேச்சாளர், நாடகாசிரியர், ஆய்வாளர், உரையாசிரியர் என பன்முகப் பரிமாணம் கொண்ட வ.சுப. மாணிக்கம் (V.S. Manickam) புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரியில் (1917) பிறந்தார். இயற்பெயர் அண்ணாமலை. இளம் பருவத்திலேயே பெற்றோரை இழந்தார். தாய்வழிப் பாட்டி, தாத்தாவிடம் வளர்ந்தார். 7 வயது வரை நடேச ஐயரிடம் குருகுலக் கல்வி கற்றார். வணிகம் பழக 11 வயதில் பர்மா சென்றார். பொய் சொல்லுமாறு முதலாளி கூறியதை ஏற்க மறுத்தவர், வேலையை இழந்து 18 வயதில் தமிழகம் திரும்பினார். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் உதவியுடன் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து =வித்வான்+ பட்டம் பெற்றார். சென்னை பல்கலைக்கழகத்தில் பிஓஎல். முதுகலை பட்டம் பெற்றார். =தமிழில் வினைச்சொற்கள்+ என்ற பொருளில் ஆய்வு செய்து எம்ஓஎல் பட்டமும், =தமிழில் அகத்திணைக் கொள்கைகள்+ என்ற பொருளில் ஆய்வு செய்து முனைவர் பட்டமும் பெற்றார். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பணியில் சேர்ந்தார். 1964 முதல் 1970 வரை அதன் முதல்வராகப் பணியாற்றினார். பின்பு அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் 7 ஆண்டுகளுக்கு மேல் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக 1979 முதல் 1982 வரை பணியாற்றினார். தமிழில் பல புதிய சொல்லாக்கங்களை தந்தவர். மூதறிஞர், செம்மல், முதுபெரும் புலவர், பெருந்தமிழ்க் காவலர் என்றெல்லாம் போற்றப்படும் வ.சுப. மாணிக்கம் 1989 ஏப்ரல் 25ம் தேதி 72வது வயதில் மறைந்தார்.

## 3. முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. (பிறப்பு நவம்பர் 11, 1899 டிசம்பர் 19, 1994 மறைவு) திருச்சியை சேர்ந்தவர். தமிழ் உணர்வாளர். நீதிக்கட்சி உறுப்பினராக பிராமணரல்லாதோர் முன்னேற்றத்திற்காகவும் தமிழ்மொழியின் உயர்விற் காகவும் பாடுபட்டவர். துவக்கத்தில் பெரியாருடன் இணைந்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட போதும் அவரது திராவிடநாடு கோரிக்கையுடன் உடன்படாதவர். அது தமிழரின் தனித்தன்மையை நீர்த்துவிடும் என எண்ணினார். இவர் எழுதியுள்ள 23 நூல்களும் தமிழ்வளர்ச்சித் துறையால் 20072008இல் நாட்டுடைமையாக்கப்பட்டது. 1893ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் தேதி பெரியண்ண பிள்ளை சுப்புலட்சுமி அம்மையார் அவர்களுக்கு புதல்வனாய்ப் பிறந்தார். தமிழ் இலக்கண கடலான இவர் பள்ளிக்குச் சென்றதில்லை. ஐந்தாவது வயதில் முத்துச்சாமிக் கோனாரிடம் மண ல் தமிழ் எழுத்துக்களை எழுதிப் பயிற்சி பெற்றார். நாவலர் வேங்கடசாமி நாட்டார், மறைமலையடிகள், திரு.வி.க, நாவலர், சோமசுந்தர பாரதியார் முத ய தமிழறிஞர்கள் தொடர்பால் தாமாக முயன்று தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெற்றார். முதல் இந்தி எதிர்ப்புப் போரில் (1938) தந்தை பெரியாரோடும், தமிழறிஞர்களோடும் கைகோத்துப் போராடிய முதன்மைப் போராளியே கி.ஆ.பெ. விசுவநாதம். 1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரில் மக்களைத் தூண்டியதாகக் கூறி இரண்டு மாதம் சிறையிலடைக்கப் பட்டார். இவருக்கு 1956ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கம் ==முத்தமிழ்க் காவலர்++ விருது வழங்கியது.

## 4. ரா.பி. சேதுப்பிள்ளை

ரா.பி. சேதுப்பிள்ளை (மார்ச் 2, 1896 ஏப்ரல் 25, 1961 திருநெல்வே யில் இராசவல் புரம் என்ற ஊரில் 1896 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 2ஆம் நாள் பிறவிப்பெருமான்பிள்ளை சொர்ணம்மாள் ஆகியோருக்கு மகவாகப் பிறந்தார். சேதுக்கடலாடி இராமேசுவரத்திலுள்ள இறைவனைப் பூசித்ததனால் பிறந்த தம் மகனுக்கு சேது என்று பெயர் சூட்டினர். இரா.பி. சேதுப்பிள்ளையின் முன்னெழுத்துக்களாக அமைந்த =இரா+ என்பது இராசவல் புரத்தையும், =பி+ என்பது =பிறவிப்பெருமான்பிள்ளை+ அவர்களையும் குறிப்பன. 25 ஆண்டுக் காலம் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய சேதுப்பிள்ளை தம் எழுத்தாலும் பேச்சாலும் தமிழுக்குப் பெருமையும் தமிழ் உரைநடைக்குச் சிறப்பையும் சேர்த்தார். இரா.பி. சேதுப்பிள்ளையின் உரைநடை நூல்கள் இருபதுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் அடங்குவன. பதினான்கு கட்டுரை நூல்கள் மூன்று வாழ்க்கை வரலாற்று நூல்கள் எழுதியுள்ளார். இவர் எழுதிய முதல் கட்டுரை நூல் ==திருவள்ளுவர் நூல் நயம்++ என்பதாகும். படைத்த உரைநடை நூல்களுள் தலைசிறந்ததாகவும் வாழ்க்கைப் பெருநூலாகவும் விளங்குவது, ==தமிழகம் ஊரும் பேரும்++ என்பதாகும். இந்நூல் அவரின் முதிர்ந்த ஆராய்ச்சிப் பெருநூலாகவும், ஒப்பற்ற ஆராய்ச்சிக் கருவூலமாகவும் திகழ்கிறது. சேதுப் பிள்ளையின் =தமிழின்பம்+ என்னும் நூலுக்கு இந்திய அரசு அளிக்கும் சாகித்ய அகாதமியின் பரிசு வழங்கப்பட்டது. கவியோகி எனப் போற்றப்படும் சுத்தானந்த பாரதியார் இரா.பி. சேதுப்பிள்ளையைச் ==செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை++ என்று அழைத்துப் பாராட்டினார். அடுக்குமொழி, எதுகை, மோனை, இலக்கியத் தொடர் மூன்றையும் உரைநடைக்குள் கொண்டு வந்த சேதுப்பிள்ளையின் பேச்சாற்றலைப் பாராட்டித் தருமபுர ஆதீனம் 1950ஆம் ஆண்டு =சொல் ன் செல்வர்+ என்னும் விருது வழங்கியது. சேதுப்பிள்ளையின் நடை ஆங்கில அறிஞர் ஹட்சனின் நடையைப் போன்றது என்று சோமலே பாராட்டுவார். இவர் தமிழுக்கு ஆற்றிய பணிகளுக்காகச் சென்னைப் பல்கலைக் கழகம் =முனைவர்+ பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. சேதுப்பிள்ளை ஏப்ரல் 25, 1961இல் தம் 65ஆம் வயதில் இறந்தார். இவருடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ள**).**

## 5. ஔவை துரைசாமி

ஔவை துரைசாமி (செப்டம்பர் 5, 1903 ஏப்ரல் 3, 1981) தமிழறிஞர். தமிழ்மொழி மே ருந்த பற்றுத ன் காரணமாகத் தான் பார்த்து வந்த உடல்நலத் தூய்மைக் கண்காணிப்பாளர் பணியில் இருந்து விலகி; அதன்பின் தமிழ் கற்றுத் தமிழறிஞராக உயர்ந்த பெருமைக்குரியவர். விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்திற்கு அருகில் உள்ள ஔவையார் குப்பம் என்னும் சிற்றூரில் சுந்தரம் பிள்ளை சந்திரமதி தம்பதிக்கு மகனாக 1903 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் பிறந்தார். கரந்தைத் தமிழ்ச்சங்கப் பள்ளியில் தமிழ்வேள் உமாமகேசுவரனால் ஆசிரியராகப் பணியமர்த்தப்பட்டார். தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ் முத ய இதழ்களில் தமிழ் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினார். 1942 இல் திருப்பதி திருவேங்கடவன் கீழ்த்திசைக் கல்லூரியில் ஆராய்ச்சியாளராகப் பணியில் சேர்ந்தார். 1943 முதல் எட்டு ஆண்டுகளுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறையில், விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1951இல் மதுரை தியாகராசர் கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்தார். மணிமேகலைக் காப்பியத்திற்குப் புத்துரை எழுதும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் திடீரென்று இயற்கை எய்தி விட்டதை அடுத்து, ==கரந்தை கவியரசு++ வேங்கடாசலம் பிள்ளையின் விருப்பத்திற்கிணங்க, மணிமேகலைக் காப்பியத்தின் இறுதி நான்கு காதைகளுக்கும் விளக்கவுரை எழுதிக் கொடுத்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் போது, சைவ சமய இலக்கிய வரலாறு, ஞானாமிர்தம் போன்ற அரிய நூல்களை எழுதினார். அந்நூல்கள் பல்கலைக் கழகத்தின் வெளியீடுகளாக வெளியிடப்பட்டன.

பார்வை வினாக்கள்

***சிறு வினாக்கள்: (2 மதிப்பெண்கள்)***

1. தனிப்பாடல் – சிறுகுறிப்பு வரைக.
2. பழந்தமிழரின் கட்டிடக்கலைச் சிறப்பினைச் சுருக்கி வரைக.

***பெருவினாக்கள்: (6 மதிப்பெண்கள்)***

1. இசைத்தமிழ் வளர்ச்சி குறித்து விவரி.
2. காளத்தி வேடனுக்கும், கங்கை வேடனுக்குமான சிறப்பினை ரா.பி.சேதுபிள்ளை எடுத்துரைக்கும் பாங்கினை விவரி.
3. காளத்தி வேடனுக்கும், கங்கை வேடனுக்குமான சிறப்பினை ரா.பி.சேதுபிள்ளை எடுத்துரைக்கும் பாங்கினை விவரி
4. கலைச்சிறப்பு என்னும் கட்டுரையை விவரி

# UNIT-IV

1. கூடல் என்பது எந்த நகரைக் குறிக்கும்?

   (அ). மதுரை (ஆ). வஞ்சி (இ). புகார் (ஈ). தில்லை

2. திருவெங்கைக் கோவை என்ற நூலை எழுதியவர் யார்?

   (அ). குமரகுருபரர் (ஆ). சிவப்பிரகாசர் (இ). பட்டினத்தார் (ஈ). தாயுமானவர்

3. முத்தமிழ் காவலர் எனப் போற்றப்பெறுபவர் யார்?

   (அ). ரா.பி.சேதுபிள்ளை (ஆ). சுபமாணிக்கனார் இ). வெள்ளைவாரணார்

   (ஈ). கி.ஆ.பெ.விசுவநாதம்

4. ‘முதுமொழி’ என்பது ____________.

   (அ). விடுகதை (ஆ). சொலவடை (இ). பழமொழி (ஈ). மறைமொழி

5.“ காக்கை விடு தூது” என்னும் நூலின் ஆசிரியர் யார்?

   (அ) வெள்ளைவாரணர் (ஆ) மாணிக்கம் (இ) விசுவநாதம் (ஈ) சேதுப்பிள்ளை

6. சேதுப்பிள்ளை அவர்கள் இயற்றிய முதல் கட்டுரை நூல் எது?

   (அ) திருவள்ளுவர் நூல் நயம் (ஆ) தமிழின்பம் (இ) ஞானாமிர்தம் (ஈ) சிலம்பு

7. முத்தமிழ்க் காவலர் என்ற சிறப்புப்பெயர் கொண்டவர் யார்?

   (அ) மாணிக்கம் (ஆ) வெள்ளைவாரணர் (இ) சேதுப்பிள்ளை (ஈ) விசுவநாதம்

8. முத்தமிழ்காவலர் எனப் போற்றப்படுபவர்?

   அ) வ.சுப. மாணிக்கனார்ஆ)துரைசாமிஇ)கி.ஆ.பெ.விசுவநாதம்ஈ)வெள்ளைவாரணார்

9. கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழ் எனக் கூறியவர்?

   அ) கம்பர் ஆ) மாணிக்க வாசகர்இ) நக்கீரர் ஈ) இறையனார்

10. கிழக்கே இருந்து வருகிற காற்றைத் தமிழர்கள் எவ்வாறு அழைத்தனர்?

    அ) தென்றல் ஆ) வாடை இ) கொண்டல் ஈ) கோடை

11. தமிழக ஓவியக்கலைக்குச் சான்றாகத் திகழ்வது எங்குள்ள ஓவியங்கள்?

    அ) சித்தன்னவாசல் ஆ) தாராசுரம் இ) மாமல்லபுரம் ஈ) கொள்ளிடம்

12. தமிழின்பம் எனும் நூலின் ஆசிரியர்?

    அ) வ.சுப மாணிக்கம் ஆ) கி.ஆ.பெ.விசுவநாதம் இ) ஔவை துரைசாமி

    ஈ) ரா.பி.சேதுப்பிள்ளை

13. இசையைப் போற்றி வளர்த்த அரசர்____________.

    (அ) பாண்டியன் (ஆ) சேரன் (இ) சோழன் (ஈ) பாண்டியன்

14. முத்தமிழ் காவலர் என்று போற்றப்பட்டவர்----

(அ) கி.ஆ.பெ.விசுவநாதன் ஆ) ரா.பி.சேதுபிள்ளை (இ)சுபமாணிக்கனார் (ஈ)வெள்ளைவாரணார்

15. காளத்தி வேடனும் கங்கைவேடனும் என்னும் கட்டுரையின் ஆசிரியர்

(அ) சுபமாணிக்கனார் ஆ) ரா.பி.சேதுபிள்ளை (இ) வெள்ளைவாரணார் (ஈ) கி.ஆ.பெ.விசுவநாதம்

16. திருவள்ளுவர் நூல்நயம் என்னும் நூலின் ஆசிரியர்----

(அ)ரா.பி.சேதுபிள்ளை (ஆ)சுபமாணிக்கனார் (இ)வெள்ளைவாரணார் (ஈ) கி.ஆ.பெ.விசுவநாதம்

17. காக்கைவிடு தூது என்னும் நூலின் ஆசிரியர்

(அ) வெள்ளைவாரணர் (ஆ) சுபமாணிக்கனார் (அ) ரா.பி.சேதுபிள்ளை (ஈ) புதுமைப்பித்தன்

18. 'கல்லணையைக் கட்டிய அரசன்__________.

(அ)கரிகாற் சோழன் (ஆ). சேரன் (இ) பாண்டியன் (ஈ) சோழன்

19. நடேச ஐயரிடம் குருகுலக் கல்வி கற்றவர் யார்?

(அ).வெள்ளைவாராணர் (ஆ).வ.சுப. மாணிக்கம்(இ). ஔவை துரைசாமி (ஈ). சேதுப்பிள்ளை

20. முத்தமிழ் காவலர் என்று யாரைக் குறிப்பிடுகிறோம்?

(அ). அண்ணா (ஆ) விசுவநாதம் (இ). பிரபஞ்சன் (ஈ). சங்கரலிங்கம்

21. இரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் பிறந்த ஆண்டு எது?

(அ). 1891 (ஆ). 1893 (இ). 1895 (ஈ). 1896

22. திருநெல்வேலியில் உள்ள இராசவல்லிபுரம் என்ற ஊரில் பிறந்தவர் யார்?

(அ). விசுவநாதம் (ஆ). ஔவை துரைசாமி (இ). சேதுப்பிள்ளை (ஈ). சங்கரலிங்கம்

23.ஏட்டில் இல்லாத இலக்கியம்' என்னும் கட்டுரையின் ஆசிரியர் யார்?

(அ).சங்கரலிங்கம் (ஆ).வ.சுப. மாணிக்கம் (இ).ஔவை துரைசாமி (ஈ).இரா.பி.சேதுப்பிள்ளை

**UNIT-V**

**SYLLABUS**

**மொழிப்பயிற்சி – மொழிப்பயிற்சி (பேச்சுப்பயிற்சி & படைப்பாக்கப் பயிற்சி)**

## மொழிப்பயிற்சி

1. படைப்பிலக்கியப் பயிற்சிகள்
   (கதை, கவிதை, கட்டுரை, உரைநடை எழுதுதல், நேர்காணல்)
2. மொழிபெயர்ப்பு

பார்வை வினாக்கள்

***பெருவினாக்கள்: (6 மதிப்பெண்கள்)***

1. 'உயரட்டும் நாடு' என்ற தலைப்பில் கட்டுரை வரைக.
2. 'விடியலைத் தேடி' என்னும் தலைப்பில் 25 வரிகளுக்கு மிகாமல் கவிதை வரைக.
3. 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.
4. 'மரங்கள் மண்ணின் உயிர்' என்னும் தலைப்பில் ஒரு கவிதை வரைக.

KAHE

KAHE

# கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்

**கோவை- 21.**

Enable | Enlighten | Enrich
KARPAGAM
ACADEMY OF HIGHER EDUCATION
(Deemed to be University)
(Established Under Section 3 of UGC Act, 1956 )

# கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

# தமிழ்த்துறை

(2019-2020)

**பகுதி – I, தமிழ்ப் பாடத்திட்டம்**

**இரண்டாம் பருவம்:19LSU201**

(முதலாமாண்டு இளநிலை **அறிவியல்** பட்ட வகுப்புகளுக்குரியது)

## (For I-UG Science Degree Classes)

# கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்
# தமிழ்த்துறை
# பகுதி - I தமிழ்ப் பாடத்திட்டம் (2019 - 2020)
# (இளநிலை அறிவியல் பட்ட வகுப்புகளுக்குரியது)
# (For I-UG Science Degree Classes)

**பாடத்திட்டப் பொதுநோக்கம்**

- கற்றல் வழி சிந்தனைத் திறனையும், கருத்து வெளிப்பாட்டுத் திறனையும், ஆய்வுநோக்கையும் மேம்படுத்துதல்.
- இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வின் நுட்பமான பகுதிகளை உணர்த்துதல்.
- மனித மனத்தினைப் பக்குவப்படுத்துதலில் இலக்கியம் தரும் பங்கினை உணர்த்துதல்.
- வளர்ந்து வரும் சமூகத்தில் அறஉணர்வு, பண்பாடு போன்றவை குறித்து அறிவூட்டல்.
- அரசுத் தேர்வுகளுக்கு மாணவர்களை ஆயத்தமாக்குதல்.

**பாடத்திட்டப் பயன் விளைவு**

- இந்திய குடியுரிமைப் பணி முதலான போட்டித் தேர்வுகளில், விருப்பப் பாடமாக இடம்பெறுகின்ற, 'தமிழ் இலக்கிய வரலாறு' குறித்த முழுமையான அறிமுகம் பெற்றிருத்தல்.
- கல்வெட்டியல், ஓலைச்சுவடியியல் மற்றும் தொல்லியல் சார்ந்த ஆவணத் தேடலுக்குரிய ஆய்வுமனப்பான்மையுடன், இலக்கியங்களை அணுகுதல்.
- தமிழின் வளர்ச்சித் துறையாகிய, 'அறிவியல் தமிழ்' ; 'இணைய தமிழ்' குறித்த பன்நோக்கு அணுகுமுறையிலான ஆய்வுச் சிந்தனை வளர்ச்சி பெற்றிருத்தல்.
- வேலைவாய்ப்புக்குரிய சுயதிறன் மேம்பாட்டுடன், படைப்பாக்கத்திறன் மேம்பாடும் பெற்றிருத்தல் .
- சமுதாய மற்றும் வாழ்வியல் மதிப்புகளைப் பேணுவதற்குக் கருவியாக இலக்கியங்களை நாடுகின்ற மனப்பான்மை வளர்ச்சி.

## தாள்கள் வரிசையும் தேர்வுச் செயல்திட்டமும்

## பகுதி-I தமிழ்
## இளநிலைப் பட்ட அறிவியல் வகுப்புகள்

| பருவம் | தாள் | கற்பிக்கும் நேரம்/வாரம் | தேர்வு மணிகள் | மதிப்பெண் அக/எழுத்து | மொத்தம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| ஒன்று | I | 4 | 3 | 40 / 60 | 100 | 4 |

# கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்

# தமிழ்த்துறை

## பகுதி - I தமிழ்ப் பாடத்திட்டம் (2019-2020)

**பகுதி – I, தமிழ்** **இரண்டாம் பருவம் 19LSU201**

**தமிழ் இரண்டாம் தாள்** 4-H,4-C

**(இளநிலை அறிவியல் பட்ட வகுப்புகளுக்குரியது)**

**(For I-UG Science Degree Classes)**

---

**அலகு – I : பக்தி இலக்கியம் (7 மணிநேரம்)**

சைவ, வைணவ இலக்கியங்கள் - தோற்றம் ,வளர்ச்சி, வரலாறு.

1. **சைவம் - (15 பாடல்கள்)** பெரியபுராணம் – திருமூலநாயனார் புராணம் -அந்தி இளம்பிறைக் கண்ணி, மற்று அவர்தாம் அணிமா, காவிரி நீர் பெருந்தீர்த்தம், அந்நிலைமைத் தானத்தை, அந்தணர்தம் சாத்தனூர், மற்றுஅதன் தன் உடம்பினை, இவன் உயிர்பெற் றெழில், பாய்த்திய பின் திருமூலராய், வெய்ய சுடர் கதிரவனும், அங்கவளும், பித்து உற்ற மையல் அன்று, இந்த நிலைமையில், ஆவடு தண்துறை, ஊன்உடம்பில், முன்னிய அப்பொருள்.
2. **வைணவம் – ஆண்டாள் நாச்சியார் திருப்பாவை: (11 பாடல்கள்):** மார்கழித்திங்கள், வையத்து வாழ்வீர்காள், ஓங்கி உலகளந்த, ஆழி மழைக்கண்ணா, மாயனை மன்னுவட மதுரை, சிற்றம் சிறுகாலே, ஒருத்தி மகனாய், மாலே மணிவண்ணா, கூடாரை வெல்லும், கறவைகள் பின்சென்று, வங்கக்கடல் கடைந்த.

**அலகு – II : சங்க இலக்கியம் (14 மணிநேரம்)**

சங்க இலக்கியங்கள் - அறிமுகம்

**அ). எட்டுத்தொகை**

**நற்றிணை:** கொண்டல் மாமழை – குறிஞ்சி – தலைவன் - 140

**குறுந்தொகை:** வாரார் ஆயினும், வரினும் –முல்லை– தலைவி - 110

**ஐங்குறுநூறு :** மருதம் –தோழி -வேட்கைப்பத்து: வாழிஆதன் வாழி அவனி - 6

**பதிற்றுப்பத்து :** சிதைந்தது மன்ற - 27

**பரிபாடல்:** பரிபாடல் திரட்டு-வையை –10: மலைவரை மாலை- கரை நண்ணி 10:1-25, ஆங்க அணிநிலை மாடத்து- நீ கானும் போன்ம் 10: 41-55, இலம்படு புலவர் - ஏத்தினர் தொழுவே 10: 126-130.

**கலித்தொகை :** பாலைக்கலி- செவிலி – எறித்தரு கதிர்தாங்கி-9

**அகநானூறு :** அன்னை அறியினும் அறிக – தோழி - நெய்தல் - 110

**புறநானூறு :** யாதும் ஊரே யாவருங் கேளிர் –பொதுவியல்- 192

**ஆ). பத்துப்பாட்டு: நெடுநல்வாடை - கார்காலச் சிறப்பு :** வையகம் பனிப்ப -1-70

## அலகு - III : காப்பியம் (6 மணிநேரம்)

**(அ). சிலப்பதிகாரம்:**

**மங்கல வாழ்த்துப் பாடல்:** (21-29)- நாக நீள் நகரொடு-கண்ணகி என்பாண் மன்னோ .

வழக்குரை காதை, (48-56) - நீர்வார் கண்ணை-புகா ரென்பதியே .

**வஞ்சின மாலை:** (5-34) - வன்னிமரமும் – பிறந்த பதிப் பிறந்தேன்.

**நடுகற் காதை:** (207-234) - அருத்திற லரசர் – மன்னவ ரேறென்,.

**வாழ்த்துக்காதை:** (9) - என்னேயிஃ தென்னே – மீவிசும்பிற் றோன்றுமால்.

**(ஆ). மணிமேகலை:**

**பசியின் கொடுமை: பாத்திரம் பெற்ற காதை:**

'போதி நீழல்' - 'பெருகியதன்றோ' , 'ஆற்றுநர்க்களிப்போர்' - 'நல்லறம் கண்டனை' (73-98).

**சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை:** மாவண் கிள்ளிக்கு காவலன் உரைத்தவை:

'பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்து -

அரவோர்க் காக்கினன் அரசாள் வேந்தன்' (116-163).

## அலகு – IV : கட்டுரைகள் (8 மணிநேரம்)

1. **தமிழிசை இயக்கம்** – பேரா. க. வெள்ளைவாரணர்
2. **தனிப்பாடல்கள் -** பேரா. வ. சுப. மாணிக்கனார்
3. **கலைச்சிறப்பு** - முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்
4. **காளத்திவேடனும் கங்கைவேடனும்** –சொல்லின்செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை
5. **ஏட்டில் இல்லாத இலக்கியம்** – ஔவை துரைசாமி

## அலகு- V : மொழிப்பயிற்சி (5 மணிநேரம்)

**(பேச்சுப்பயிற்சி & படைப்பாக்கப் பயிற்சி)**

படைப்பிலக்கியப் பயிற்சிகள் (கதை, கவிதை, கட்டுரை, உரைநடை எழுதுதல், நேர்காணல்) மொழிபெயர்ப்பு

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

Part I TAMIL 2019. Science Karpagam Academy of Higher Education, Coimbatore – 21.

# KARPAGAM ACADEMY OF HIGHER EDUCATION

*(Deemed to be University Established Under Section 3 of UGC Act 1956)*

**Coimbatore – 641 021.**

Enable | Enlighten | Enrich
(Deemed to be University)
(Under Section 3 of UGC Act 1956)

## LECTURE PLAN DEPARTMENT OF TAMIL

STAFF NAME: Dr. R. MADHANKUMAR, Dr.B. UMARANI, DR. R. VEERAPATHIRAN

SUBJECT NAME : TAMIL SUB.CODE:19LSU201

SEMESTER : II CLASS: I B.Sc Computer Science

| Month | Topics to be Covered | Lecture Duration Period | Support Material/Page Nos |
|---|---|---|---|
| நவம்பர் 2019 | பாடத்திட்டத்தின் இன்றியமையாமையும், பயன்பாட்டு நோக்கும் | 01 | |
| | பக்தி இலக்கியம் - சைவம் (பெரியபுராணம்) - அறிமுகம் | 01 | T1:09 |
| | திருமூலநாயனார் புராணம் | 02 | T1:09 |
| | சங்க இலக்கியம் – எட்டுத்தொகை - அறிமுகம் | 01 | T1:19 |
| | நற்றிணை | 01 | T1:21 |
| | வைணவம் அறிமுகம் | 01 | W : 1 |
| | ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாவை | 02 | T1:14 |
| | கட்டுரை - தமிழிசை இயக்கம் | 02 | T1:53 |
| | கட்டுரை – காளத்தி வேடனும் கங்னைவேடனும். | 02 | T1:53 |
| | புறநானூறு | 01 | T1:34 |
| | **மொத்த மணிநேரம்** | 13 | |
| திசம்பர் 2019 | காப்பியம் – சிலப்பதிகாரம் - அறிமுகம் | 01 | T1:41 |
| | மங்கல வாழ்த்துப் பாடல், நடுகற் காதை | 01 | T1:43 |
| | வாழ்த்துக் காதை, வழக்குரை காதை | 01 | T1:42 |
| | பரிபாடல் – வையை- சிறப்பு | 01 | T1:28 |
| | மதுரை நகர்ச் சிறப்பு | 01 | W : 1 |
| | ஐங்குறுநூறு | 01 | T1:23 |
| | குறுந்தொகை | 01 | T1:22 |
| | காட்டில் ஒரு மான் – சிறுகதை | 02 | T1:69 |
| | நாற்காலி - சிறுகதை | 02 | T1:76 |

| | | | |
|---|---|---|---|
| | பத்துப்பாட்டு- திருமுருகாற்றுப்படை - அறிமுகம் | 01 | T1:35 |
| | முருகன் இருப்பிடங்கள், குறமகளின் வெறியாட்டு | 01 | W : 2 |
| | முருகன் அருள்புரிதல் | 01 | T1:37 |
| | மொழிப்பயிற்சி | 01 | |
| | திருப்புதல் | 01 | |
| | **மொத்த மணிநேரம்** | **16** | |
| **ஜனவரி 2020** | அகநானூறு | 02 | T1:32 |
| | பதிற்றுப்பத்து | 02 | T1:24 |
| | கலித்தொகை | 01 | W : 1 |
| | நகரம் - சிறுகதை | 02 | T1:86 |
| | மொழிப்பயிற்சி | 06 | |
| | திருப்புதல் | 01 | |
| | **மொத்த மணிநேரம்** | **14** | |
| **பிப்ரவரி 2020** | திருப்புதல் | 05 | |
| | **மொத்த மணிநேரம்** | **05** | |
| | **மொத்த மணிநேரங்கள்** | **48** | |

**TEXT BOOK**

. **பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

**WEBSITES**

**W1**: www.tvulibrary.org.in

**W2:** http://www.maduraitamilproject.com